எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. —107

எழுபிறப்பும் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். —62



எழுபிறப்பு-?

புலவர் - மு.தெய்வநாயகம்

மெய்ப் பொருள் பதிப்பகம்

எழுபிறப்பு-?

புலவர். மு. தெய்வநாயகம்

மெய்ப் பொருள் பதிப்பகம்

2-ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,
அயன்புரம் — சென்னை-23.

முதற் பதிப்பு — 1972 ஏப்ரல்

விலை ரூ. 2-50

சுசி பிரிண்டர்ஸ், சென்னை-15.

மதிப்புரை

பேராசிரியர், பைந்தமிழ்ப் பாவலர்
அ. கி. பரந்தாமனுர், எம். ஏ.

புலவர் திரு. தெய்வநாயகம் அவர்கள் எழுதியுள்ள 'எழுபிறப்பு' என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன்; ஒரு முறைக்கு இருமுறை படித்தேன். அறிவியல் உலகத்துச் சிந்தனையாளர்கள் ஏற்றுப் போற்றும் வகையில் உலகப் பொதுமறை தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'எழுபிறப்பு' என்னும் தொடருக்குப் பல தலைமுறைகள் என்றே பொருள் கொண்டிருக்கவேண்டும் என்று இவர் முடிவுகட்டித் திருக்குறளிலிருந்தே,

(1) ''நெருநற்றுச் சென்றூர் எம்காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து''

(2) ''பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துத் தெவ்வோர்
எழுபது கோடி யுறும்''

எனும் குறட்பாக்களில் வருகின்ற எழு, எழுபது என்பன, பல எனும் பொருளில் வருவதை எடுத்துக் காட்டியிருப்பதோடு, கிறித்துவ மறையாகிய விவலியத்தினின்றும் ஏழு என்பது பல என்னும் பொருளில் வந்திருப்பதைச் சான்றுகளாகத் தந்திருக்கிறூர். இவர், தமக்கு ஆதரவாக இக்காலச் சிந்தனையாளர்களின் உரையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் அவ்வாறு எண்ணிஞரா, இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை. பல பிறப்பு உண்டு என்பது கண்ணுடிக் குழாயில் போட்டு மெய்ப்பிக்கூடியதும் அன்று; அறிவியல் முறையில் தெரிவிக்கவும் இயலாது.

இந்து சமயப் பெரியார்களும், ஜைன பௌத்த சமயச் சான்றோர்களும் பல பிறப்புகள் உண்டு என்று நம்பி பற்பல நூற்றாண்டுகளாய்ச் சொல்லி வைத்திருக்கிறார்கள்; அவ்வளவுதான். தாவின் கொள்கை நிலைநாட்டப்பட்டதும், எத்தனையோ கொள்கைகள் ஆட்டம் கொண்டதுபோல இந்தப் பிறவிச் சுழற்சிக் கொள்கையும் ஆட்டம் கண்டு விட்டது. ஆதலால், கிறித்தவ இளைஞரான புலவர் திரு. தெய்வநாயகம் அவர்கள் 'எழுபிறப்பு' எனுந் தொடருக்கு இக்கால அறிவியல் கருத்துக்கு ஏற்ற வாறு 'பல தலைமுறைகள்' எனும் பொருளைப் பொருத்தமாகக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது. அதைத் திறம்பட எழுதியிருப்பதும் பாராட்டுக் குரியது. ஒருவேளை தெய்வப்புலவர் திருவள்ளுவரே இன்று எழுந்து வரமாட்டார்-எழுந்து வருவதான ஓர் அற்புதம் நிகழுமானால், அவரும் தாம் இயற்றிய பொது மறையில் குறிப்பிட்டுள்ள எழுபிறப்பு என்னும் தொடருக்குப் பல தலைமுறைகள் எனப் புலவர் திரு. தெய்வநாயகம் அவர்கள் உரை கூறியுள்ளதைக்கண்டு முதலில் வியப்படைந்து, பின், "ஏன்? இவ்வாறு சொன்னால்தான் என்ன குடி முழுகிப் போய்விடும்?" என்று சிந்தித்து ஒப்புக்கொண்டு நன்றி கூறினாலும் கூறலாம். இது திருக்குறளின் ஒப்புயர்வற்ற தனிச்சிறப்பாகும்.

மேலும், திருவள்ளுவர் அளித்துள்ள திருக்குறளுக்கு வேதாந்த முறையில் சில உரைகள் உண்டு; சைவ சித்தாந்த முறையில் சில உரைகள் உண்டு; சமண சமய முறையில் சில உரைகள் உண்டு; இக்கால அறிவியல் முறையில் சில உரைகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. இம்முறையில் எழு பிறப்புக் குறித்து எழுந்த ஆராய்ச்சி நூலே திரு. தெய்வநாயகம் எழுதியுள்ள இந்த நூலாகும். சிந்தனையாளர்கள் இந்நூலைப் படித்துச் சிந்திக்க வேண்டும் என்று கூறுகிறேன்.

தமிழ்ப்பேரறிஞர் திரு. வி. க., ஆராய்ச்சிப் பேராசிரியர் திரு. S. வையாபுரிப் பிள்ளை, கிறித்த வக்கல்லூரிப் பேராசிரியரான ச. த. சற்குணர் போன்றவர்கள் திருவள்ளுவர் சமயம் சமணமே என்று சான்றுகள் காட்டி அறுதியிட்டு உறுதியாய்க் கூறியுள்ளார்கள். நானும் திருவள்ளுவர், சங்க காலத்துக்குப்பின் இருந்தவர் என்றும் அவரது சமயம் சமணமே என்றும் கருதுபவன். எனினும், காலத்துக்கு ஏற்றவாறு, திரு. தெய்வநாயகம் அவர்கள் பிறப்புச் சுழற்சிக் கருத்தை மறுத்து, எழு பிறப்பு என்னும் தொடருக்குப் பல தலைமுறைகள் என்று அளவை முறையில் பலப்பல சான்றுகள் தந்து நிலைநாட்டியிருப்பதைக் கண்டு பாராட்டி, அவரது திறமையையும் முயற்சியையும் மதிக்கின் றேன். இந்நூலைப் படிக்கும் கிறித்தவ நண்பர்கள் இதுவரைக்கும் திருக்குறள் ஓர் அஞ்ஞானி நூல் என்று தவறாகக் கருதியிருந்த கருத்து மாறித் திரு வள்ளுவர் அரிய பெரிய மெய்ஞ்ஞானி என உணர்ந்து, திருக்குறளைப் படித்துப் பயன் பெறு வார்கள் என்று நம்புகிறேன். இந்த அளவுக்குத் துணைபுரியுமாறு இந்நூலை இயற்றிய புலவர் திரு. தெய்வநாயகம் அவர்களை வாழ்த்திப் பாராட்டு கிறேன்.

அ. கி. பரந்தாமனார்.

ஆற்றலுரை

திரு. க. அறிவழகன், M.A., M.L.C.,
தலைவர்,
ஐ. நா. கல்வி அறிவியல் பண்பாட்டு
அமைப்பு மன்றம், தமிழ்நாடு.

எழுமையின் சிறப்பு

புலவர் மு. தெய்வநாயகம் அவர்கள் தீட்டியுள்ள எழுபிறப்பு அவரது ஆருவது நூலாகும். வள்ளுவர் பற்றி அவர் எழுதிய ஆறு நூல்களில் இந்நூல் முதலிடம் வகிக்கின்றது. எழுபிறப்பு, ஏழு பிறப்பல்ல, என்பதை இதில் உறுதியோடு சாற்றுகின்ருர்.

தெய்வப்புலவருக்கு கிருத்துவ சமயத்து திரு. தெய்வநாயகத்தின் பொருளுரை கலங்கரை விளக்கமாய் வழி காட்டுகின்றது.

எழுபிறப்பை ஏழு பிறப்பல்ல என்று சான்று பகர்வதற்கு தெய்வநாயகம் எத்தனை எத்தனையோ எடுத்துக்காட்டுகளைத் தந்து நிறுவுகின்ருர்.

காமத்துப்பாலில் பரிமேலழகரே கூறும் "ஏழ் என்பது அதற்கு மேலாய் மிக்க பன்மை குறித்து நின்றது" என்ற பொருள் விளக்கத்தை எடுத்துச் சாற்றியிருப்பது புலவரது ஆழ்ந்த ஆராய்வு உள்ளத்தை நமக்கு உணர்த்துகின்றது.

பரிமேலழகர், இப்பாலில் எழு என்பது எவ்வாறு பல ஆகும் என்பதற்கு 'ஒருவர் கூறை எழுவர் உடுத்து என்ருற்போல' என்றும் நவின்றுள்ளார்.

ஆனல் அறத்துப்பாலில் எழுபிறப்பை, ஏழு பிறப்பாய்க்கண்டு மயங்கும் பரிமேலழகர், காமத்துப் பாலில் 'ஒரு நாள் எழு நாள் போல செல்லும்' என்ற குறளடிக்குப் பொருள் காணுமிடத்து பொய்மை மயக்கம் தெளிந்துள்ளார்.

காதல் துறை, கற்று தேர்ந்தவராய் இருந்திருக்கக்கூடிய பரிமேலழகருக்கு எழுநாள் ஏழு நாளாய்ச் சுருங்காமல் ஒன்று பலவாய் எழும் நாட்களாகத் தெரிகின்றது. காதற்பிரிவு ஏழு நாட்களாய்க் குன்றி குறுகாமல் நிறை நாட்களாய்ப் பற்பலவாய்ப்பல்கித் தோன்றும் ஏங்கும் தலைவியருக்கு என்று கூறுகின்ருர் பரிமேலழகர்.

காமத்துப்பாலில் கண்ட தெளிவு மறைந்து, அறத்துப்பாலில் சமயச் சார்புக் கொள்கை அமைந்தொருபால் நெகிழ்ந்து, ஏழு பிறப்பில் சுற்றிச் சுழலுகின்ருர். சமயம் என்பது ஒருவர் தெளிந்தபின் பின்பற்றுவது சாலப்பொருத்தமுடையதாகும். ஆனல் பிறப்போடு பிறக்கும் பிறவிப் பிணியாக பரிமேலழகரைப்பிணிக்கின்றது. வள்ளுவர்க்கு உரை கண்ட பரிமேலழகர்–பிறப்பறுக்கவும் முடியாமல், ஏழு பிறவிகள் இருப்பதாகக் கூறி மயங்குகிருர்.

ஆனல் புலவர் தெய்வநாயகம் கொண்ட கோட்பாடு, வள்ளுவர்க்கு வழிகாட்டும் எழுச்சி முரசாக இயற்கையாக அமைந்தது உலகம் பெற்ற பேறே.

ஏழு பிறப்பு என்று கொள்வது பொருந்தாது என்பதற்குப் புலவர் தரும் சான்றுகள், பெரியாரையும் (பெரியவர்களையும்) ஏற்றுக் கொள்ளவைக்கும் கருத்துக்களாகும்:—

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து. (குறள்—398)

இக்குறட்பாவிற்கு பரிமேலழகர் கூறும் "ஒரு

பிறவியில் கற்றிடும் கல்வி ஏழு பிறவிகளிலும் பயன் படும்'' என்ற கருத்தை ஆசிரியர் பற்பல விளக்கங்கள் மூலம் சாடுகின்ருர். பரிமேலழகர் கூறும் 'ஏழு பிறப்பு' என்று பொருள்கொண்டால் :—

ஏழு முறை மட்டும்தான் பிறப்பா ?

இப்பிறவியின் எண் என்ன ?

ஏழில் கழிந்த பிறவி எத்தனை ?

மிகுந்தவை எத்தனை ?

விலங்கு, மரம், புற்பூண்டாய்ப் பிறப்பெடுத்த லும் உண்டோ ?

உண்டாயின் அந்நிலையில் கல்வியின் பயனென்ன ?

கசடறக் கற்றிடுதலின் மேன்மையை வள்ளுவர் ஏழு பிறவிகளுக்கு இழுப்பானேன் ?

வள்ளுவர் இழுக்கின்ருரா ?

அல்லது பரிமேலழகர் இழிகிருரா ?

கல்வி, பிறவி நீக்கத்திற்கா ?

பிறவி ஆக்கத்திற்கா ?

பண்புடை மக்களைப் பெற்ருல் ஏழு பிறப்பும் தியவை தீண்டாவா ?

(குறள்—62)

மற்ற ஆறு பிறப்பிலும் பிறக்கின்ற பிள்ளைகளின் கதி என்ன ?

புகழ்ந்தவை போற்றிச் செய்யாமலிருப்பின் மற்ற ஆறு பிறப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள லாமோ ?

(குறள்-538)

ஏழு பிறப்பில் வரும் துன்பத்தை, ஒரு பிறப்பிலேயே அடைய முடியுமானால், ஏழு பிறப்பிலும் கிடைக்கும் இன்பத்தை ஒரு பிறப்பில் அடையத் தடை ஏன்? (குறள்-835)

ஒரு பிறப்பிலேயே ஆமைபோல் அடக்க வல்லாரை ஏழு பிறப்பிற்கும் இழுத்து ஆட்டிப் படைப்பதேன்? (குறள்-126)

தமது துன்பம் துடைத்தாரை ஏழு பிறப்பிலும் உள்ளுதல் வேண்டுமாயின் துன்பம் துடைக்கப் பட்டாரும் ஏழு பிறப்பில் உழலுதல் வேண்டுமோ? (குறள்-107)

புலவர் தெய்வநாயகம் எழுப்பும் கேள்விகள், பரிமேலழகர் வாழ்ந்த காலத்தை எண்ணிப்பார்க்குமிடத்து, இப்போது ஏழாவது பிறப்பில் பரிமேலழகர் இருப்பாரானால் இப்போதாவது அவர் பிறப்பறுக்கும் என்பதில் ஐயமில்லை.

எழுமையும் ஏமாப்பு வளர்க!

வள்ளுவம் வெல்க!

க. அறிவழகன்

என்னுரை

நம் நாட்டிலுள்ள சமயங்களை, கடவுள் கொள்கை, பிறவிச் சுழற்சிக் கொள்கை, இவற்றின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. ஒரே கடவுள் கொள்கையை ஏற்காது, பிறவிச் சுழற்சிக் கொள்கையை மட்டுமே ஏற்றுள்ள சமயங்கள். (சமணம், பௌத்தம் போன்றவை)

2. ஒரே கடவுள் கொள்கையை மட்டுமே ஏற்றுப் பிறவிச் சுழற்சிக் கொள்கையை ஏற்காத சமயங்கள். (யூதம், கிறித்தவம் போன்றவை)

3. ஒரே கடவுட் கொள்கையுடன் பல தெய்வக் கொள்கையையும், பிறவிச் சுழற்சிக் கொள்கையையும் ஏற்று, சங்க காலத்திற்குப் பின்னர் முழு உருவடைந்து வளர்ந்த சமயங்கள். (இந்து சமயத்தின் உட்பிரிவுகள்)

மேலே காணும் மூவகைச் சமயங்களுள் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? என்பதைக் காணுவதோ, அல்லது திருவள்ளுவர் காலத்தில் மற்றக் கொள்கைகள் இல்லை என்பதைக் காட்டுவதோ, இந்நூலின் நோக்கம் அன்று.

மேலே காணும் மூவகைப் பிரிவுகளுள் திருவள்ளுவர் கொள்கை எதன்பாற்பட்டது? என்பதைக் காணுவதே, இவ்வாய்வின் நோக்கம்.

திருவள்ளுவர்க்கும் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கும் எவ்வித உடன்பாடும் கிடையாது; திருவள்ளுவர் கடவுள் கொள்கையை மட்டுமேயுடையவர் என்பதே இவ்வாய்வின் முடிபு.

இம்முடிபை காய்தல் உவத்தல் அகற்றித் தங்கள் உள்ளமாகிய துலாக்கோலில் இட்டு ஆய்ந்து நோக்க அறிஞர் பெருமக்களை வேண்டுகிறேன்.

தக்க ஆதாரங்களின்மேல் நிலைநிற்கும் மறுப்புகளைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள என்றும் ஆயத்தமாய் உள்ளேன்.

இந்நூலுக்கு முன்னுரையளித்த பைந்தமிழ்ப் பாவலர் பேராசிரியர், அ. கி. பரந்தாமனார், எம்.ஏ. அவர்களுக்கும், பேராசிரியர் க. அறிவழகன், எம்.ஏ; எம்.எல்.சி. அவர்களுக்கும், குறுகிய காலத்தில் இந்நூல் வெளிவர உதவி, அச்சுப்பிழை நோக்கிய அம்மையார் திருமதி புஷ்பம் சுந்தரராஜ் பி.ஏ;எல்.டி., தமிழார்வமிக்க நண்பர் திரு. லூயிஸ் ஆகியவர்களுக்கும் எனது நன்றி என்றும் உரித்தாகுக.

நடுநிலை ஆய்வு நாளும் ஓங்குக.

பூ. தேவநாயகம்.

பொருளடக்கம்

ஏழுபிறப்பு - ?

இத் தலைப்பைப் பார்த்தவுடனே நம் உள்ளங்களில் தோன்றும் எண்ணம் யாது? "மாறி மாறி வருகின்ற பல்வகையான பிறவிகளில் ஏழு பிறப்பைப் பற்றி வள்ளுவர் கூறுகிறார்" என்றுதானே நாம் எண்ணுகிறோம். இவ்வாறு நாம் எண்ணமிடக் காரணம் யாது? நாம் திருக்குறளைப் படிக்க, நமக்கு வழிகாட்டியாய் இருக்கும் உரைகளேயன்றோ? உரைகள் இல்லாமல் திருக்குறளைப் படித்துப் புரிந்துகொள்ளுவது நமக்குக் கடினமாயுள்ளது. ஆகவே குறளைப் புரிந்துகொள்ள உரையாசிரியர்களை நாடுகிறோம். குறளையும், நம்மையும் இணைத்து வைக்கும் பொறுப்பை உரையாசிரியர்கள் எடுத்துக்கொண்டுள்ளனர்: குறளுக்கும் நமக்கும் இடையேயுள்ள இவ்வுரையாசிரியர்களைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இணைப்பு சரியானதுதானா? என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். உரையாசிரியர்களைப் பற்றி ஆராய்ந்துள்ள டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களின் கருத்தை நோக்குவோம்.

> "திருவள்ளுவர் காலத்திற்கும் உரையாசிரியர் காலத்திற்கும் இடையில் ஏற்பட்ட சமுதாய மாறுதல்கள் பல. அரசியல் மாறுதல்கள் பல. வள்ளுவர் காலத்தில் சாதிகள்

இல்லை. சாதிகள் பல்கிப் பெருகிய காலத்தில்—ஒரு சாதிக்கு ஒரு நீதி கூறிய காலத்தில்—வாழ்ந்த உரையாசிரியர்கள் முன்பு கூறப்பெற்ற தொல்காப்பிய உரையாசிரியர்கள் போலவே, தத்தம் சமயச்சார்பு பற்றியும், தம் கால நிலைக்கு ஏற்பவும், தாம் கற்ற நூல்களுக்கு ஏற்பவும், தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளுக்கு உரை வரைந்தனர் என்பதை நாம் நன்குணர்தல் வேண்டும்''

—டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
தமிழ் இலக்கிய வரலாறு சங்ககாலம்-பக். 126

ஆகவே நாம் மேலே கண்ட டாக்டர் அவர்களின் கருத்துப்படி உரையாசிரியர்களின் கருத்துக்கள், நம்மையும், திருக்குறளையும் இணைக்கும் பாலமாக விளங்குவதற்குப் பதிலாக, நாம் திருக்குறளை நன்முறையில் சரியானபடி உணர்ந்து கொள்ள விடாமல் இடைநின்று தடுக்கும் தடுப்புச் சுவர்களாகவும் இருத்தல் கூடும் என்பது நன்கு விளங்குகிறது.

ஆகவே வள்ளுவரின் உள்ளக் கருத்தை நாம் உள்ளபடியே நன்குணரவேண்டுமானால், உரையாசிரியர்களின் உரைகளை நீக்கிவிட்டு நேருக்கு நேராக வள்ளுவருடன் உரையாட வேண்டும். அல்லது உரையாசிரியர்களின் உரைகளைத் திறனாய்வு செய்ய வேண்டும். இதற்கு உள்ளத் துணிவு வேண்டும். ஏன்? இதுவரை நமக்கிருக்கும் கருத்துக்களை, அதாவது உரையாசிரியர்களால் நம் உள்ளத்தில் திணிக்கப்பட்டுள்ள கருத்துக்களையே யன்றோ நாம் திறனாய்வு செய்ய வேண்டியுள்ளது?

"ஒன்றையே கேட்டுக்கேட்டு, படித்துப் படித்து வருகின்ற நமக்குச் சில தவறுணர்வு

வழி எண்ணங்கள் உள்ளத்தில் ஊறிவிடு கின்றன. இந்த மரபு வழி உணர்வுகள் நம்மைப் புதிய நெறியில் எண்ண விடுவதில்லை. அப்படிப் பிறரால் எண்ணிச் சொல்லப்பட்டா லும், இந்த மரபு வழி உணர்வு, அந்தப் புதிய கருத்தை மனம் ஏற்காதவாறு தடுத்து விடுகிறது. இந்த நிலையினின்று நாம் விடுதலை பெறவேண்டும்.''

—பேராசிரியர் க. ப. அறவாணன்,
புரட்சிப்பொறி-பக். 20 (1972)

ஆகவே பேராசிரியர் அவர்களின் கருத்துப்படி நாம் விடுதலை பெற்றாகவேண்டும். விடுதலை பெற்ற உணர்வோடு, அதாவது உரையாசிரியர்களின் உரைகளை உள்ளத்திலிருந்து நீக்கியவர்களாக, அதையே திரும்பத் திறனாய்வு செய்பவர்களாக நாம் இப்போது கருத்துக்கு வருவோம்.

திருக்குறள் உரையாசிரியருள் பெரும்பகுதி யினர், வள்ளுவர் பிறவிச் சுழற்சிக் கொள்கையுடை யவர் எனக் கருதியே உரை எழுதிச் சென்றுள்ள னர். ஆனால், புலவர் குழந்தை, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் ஆகிய இருவரும் அதை மறுத்துக் கூறுகின்றனர்.

உரையாசிரியர்களுள் பெரும்பான்மையினர் கொள்கையை முதலில் நோக்குவோம். அவர்கள் பிறவிச் சுழற்சிக் கொள்கையே வள்ளுவர்க்கு உண்டு என்பதற்கு ஆதரவாகக் கொள்ளும் சொற்கள் : 1. எழுமை, 2. எழுபிறப்பு, 3. பிறப் பறுக்கல், 4. பிறவிப் பெருங்கடல் ஆகியவை யாகும். அவைகளை முறையே ஆராய்வோம்.

1. எழுமை

இச்சொல் திருக்குறள் முழுவதிலும் 5 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன :-

1. எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
   விழுமம் துடைத்தவர் நட்பு. 107
2. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
   எழுமையும் ஏமாப் புடைத்து. 126
3. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து. 398
4. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
   இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 538
5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
   தான் புக்கழுந்தும் அளறு. 835

மேலே நாம் காணும் ஐந்து இடங்களுள் எழுமையுடன் இணைத்துச் சொல்லப்படும் 'ஒருமை' என்னும் சொல்லை மூன்று இடங்களில் காண்கின்றோம். ஆகவே ஒருமையும் எழுமையும் இணைந்து காணப்படுகின்றன. 'ஒருமை' என்பதற்கு 'ஒரு பிறவியில்' எனவும், 'எழுமை' என்பதற்கு 'ஏழு பிறவியில்' எனவும் உரையாசிரியர்களால் பொருள் கொள்ளப்படுகிறது.

'ஏழு பிறவியில்' என்றால், செத்துப் பிறக்கும் மறு பிறவி ஏழு முறை மட்டுமே உண்டா? இப்பொழுது நாம் பிறந்திருக்கும் பிறவி எத்தனையாவது? இன்ன

மும் ஏழில் மீதியிருப்பவை எத்தனை? ஏழு முறைக்குப் பின் பிறவி நீக்கம் வந்துவிடுகிறதா? என்ற வினாக்கள் தோன்றுகின்றன. அது இடைவிடாது பிறவி நீக்கம் வரும்வரை கணக்கின்றிப் பல ஆயிரமாகத் தோன்றிக்கொண்டிருக்கும் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முரண்பட்டு வருகிறது. ஆகவே 'எழுமை' என்பதற்கு 'ஏழு வகையான பிறப்பு' எனப் பொருள் கூறி,

> ஊர்வ பதினொன்று மொன்பது மானிடம்,
> நீர்ப்பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய
> பந்தமாந்தேவர் பதினாலயன் படைத்த
> வந்தமில் சீர்த் தாவர நாலைந்து."

என ஓரறிவுயிர் முதல் தேவர்கள் வரையிலுள்ள ஏழுவகையான பல்கோடி உயிர்களைக் காரணம் காட்டுகின்றனர்.

'எழுமை' என்பது ஏழுவகையான பிறவி, என்பதைத்தான் பொருளாகக் கொண்டு கூறப்பட்டுள்ளதா?

நாம் மேலே கண்ட ஐந்து குறட்பாக்களையும் முறையே ஆய்வோம்.

> 1. எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
> விழுமந் துடைத்தவர் நட்பு.

இக்குறட்பாவில் எழுமை எனக் கூறிய வள்ளுவர் மீண்டும் எழுபிறப்பு என்னும் சொல்லைச் சேர்த்து, 'எழுமை எழுபிறப்பும்' எனக் கூறக்காரணம் என்ன? 'எழுமை' வேறு 'எழுபிறப்பு' வேறு எனவே எண்ண வேண்டியுள்ளதல்லவா? 'எழுமை' என்பதை எழுவகைப் பிறப்பு என்ற பொருளில் வள்ளுவர் ஆண்டிருப்பாரானால் 'எழுவகைப் பிறப்பு எழுபிறப்பும் உள்ளுவர்' எனக் கூறியதையே மீண்டும் கூறியிருப்பாரா? என்பன சிந்திக்கத் தக்கவை.

எழுமை, எழுபிறப்பு ஆகிய இருசொற்களுக்கும், பிறவிச் சுழற்சிக் கொள்கைப் படியே பொருள் கொண்டால், தனக்குச் செய்யப்பட்ட நன்மையை, ஆயிரக்கணக்கான பிறவிகளுக்குப் பின்னரும், யாராவது நினைவு கூர்ந்ததாக எங்காவது பிறவிச் சுழற்சிக் கொள்கையில் சொல்லப் பட்டுள்ளதா? சான்று உண்டா? அல்லது அவ்வாறு நினைவு கூறக்கூடும் என்ற கொள்கையாவது உண்டா? என்ற வினைக்கள் எழுகின்றன.

முற்பிறவி வினையை நினைவு கூர்ந்ததாகச் சமய இலக்கியங்களில் ஒன்றிரண்டு சான்றுகள் காட்டப் பட்டாலும் அவை, இதற்கு நேர்முந்திய பிறவி மட்டுமே தெரிந்ததாகக் கூறப்பட்டுள்ளனவேயன்றி முன்னர்த் தோன்றிய ஆயிரக்கணக்கான பிறவியையும், அப்பிறவிகளில் நிகழ்ந்தவைகளையும் விடாமல் நினைவுகூர்ந்ததாக எங்குமே சான்று இல்லை. ஆகவே அவ்வாறு நினைவு கூறுவர் என்னும் கருத்து பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முரண்பட்டதாகி விடுகிறது.

மூன்ருவதாக, தங்கள் விழுமந்துடைத்தவர் நட்பை என்றுமே நினைவு கூரக்கூடிய மேலான உள்ளமுடையவர்களுக்கு, ஆயிரக்கணக்கான பிறவிகள் தோன்றக் கூடுமா? அப்படியாஞல் பிறவி நீக்கம் யாருக்குக் கிடைக்கும்? என்ற கேள்வி எழுகின்றன.

நான்காவதாக இக்கொள்கை சமயக்கொள்கைக்கு முரண்பட்டு விளங்குவதுடன், நடைமுறைக்கும் முரண்பட்டு விளங்கும் கருத்தாகும். இன்று உலகில் வாழும் பெரியார்களுள் எவராவது ஒருவர்க்கேனும், இதற்கு முந்திய ஆயிரக்கணக்கான பிறவியைப் பற்றியும், அப்பிறவிகளில் மற்றவர்கள் தங்களுக்குச் செய்த நன்மைகளைப் பற்றியும், நினைவு

கூரக்கூடிய ஆற்றலுண்டா? அவ்வாறு இல்லை யானால் வள்ளுவர் கொள்கைப்படி உலகில் வாழ்ந்த வர்கள் எல்லோருமே நன்றிகெட்டவர்கள்தானா? உலகில். இதுவரை அவ்வாறு ஆயிரக்கணக்கான பிறவியைப்பற்றிய நினைவு கூரக்கூடிய யாருமே தோன்றவில்லையானால், செய்ந்நன்றி யறியக்கூடிய யாருமே உலகில் இதுவரை தோன்றவில்லை; இனி மேலும் தோன்ற மாட்டார்கள் என்பது பொருளா? அப்படியானால் செய்நன்றியறிதல் என்ற கருத்தே பிழையான தென்றாகிவிடுகிற தல்லவா?

இனி அடுத்த குறட்பாவை நோக்குவோம்.

2. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து. 126

இதற்குப் பரிமேலழகர் கூறும்பொருள் :

"ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம் பொறிகளையும் அடக்க வல்லானாயின், அவ்வன்மை அவனுக்கு ஏழுபிறப்பின் கண்ணும் அரணாதலை உடைத்து"

ஒரு பிறப்பில் அடக்குதல் பல ஆயிரம் பிறப்புக் களிலும் பாதுகாப்பு. 'ஐந்தடக்கல்' என்னும் சொல்லால் ஐம்புலன் குறிக்கப்படுகின்றது. 'எழுமை'—ஏழுவகையான பிறப்பு. அதாவது ஒரு புலன் முதல் ஐம்புலன் வரையிலுள்ள படிப்படி யாக உள்ள பிறப்புகள்.

"ஐம்புலனை அடக்கியவர்கள், அவ்வைம் புலனில் குறைந்த நான்கு, மூன்று, இரண்டு, ஒரு புலனுடைய உயிராகப் பிறந்தாலும், அவ்வடக்கல் அவர்களுக்குப் பயன்படும். ஆகவே ஐம்புல னுடைய மனிதனே. நீ இப்பொழுதே அடக்கிப் பழகிக்கொள்"

இக்கருத்து பொருந்துமா? பத்தாம் வகுப்பில் பயிலும் ஒரு மாணவனிடம், "இதைத் தெரிந்து கொள். இக்கருத்து உனக்கு இரண்டாம் வகுப்புக்குப் பயன்படும்" என எந்த ஆசிரியராவது கூறுவாரா? அப்படி ஒரு ஆசிரியர் கூறினால், அவருடைய அறிவு நிலையைப்பற்றியே மாணவன் ஐயுறுவான் அல்லவா? 'அடக்கல்'—எதற்குப் பயன்படுகிறது? பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பிறவி நீக்கத்திற்கல்லவா பயன்படுகிறது?

இங்கு வள்ளுவர் அடக்கல் பிறவி நீக்கத்திற்குப் பயன்படும் எனச் சொல்லுவதற்குப்பதில், பிறவிச் சுழற்சியில், கீழ்நிலைப் பிறவியில் பயன்படும் எனக் கூறுகிறார் என்ற கருத்துப் பொருந்துமா?

அடக்குதல் கைவரப்பெற்ற ஆறறிவு மனிதனுக்குக் கிடைக்க இருப்பது பிறவி நீக்கமா? கீழ்நிலைப் பிறப்பா? பிறவிச் சுழற்சிக் கொள்கையுடையாரின் கோட்பாடு என்ன? வள்ளுவர் பிறவிச் சுழற்சிக் கொள்கையுடையவரானால் அக்கொள்கைக்கும் மாறுபட்ட, கேட்டவர்கள் நகைக்கக்கூடிய கருத்தைக் கூறுகின்றாரா? மூன்றாவது குறட்பாவை நோக்குவோம்.

3. ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து. 398

பரிமேலழகர்

"ஒருவனுக்கு, தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி எழுபிறப்பினும் சென்று உதவுதலையுடைத்து." இங்கும் எழுபிறப்பினும் என்பது, ஏழு வகையான பிறவியாகிய பலலாயிரம் பிறவியையே குறிக்கிறது அதாவது ஓரறிவு முதல் தேவர்கள் வரையுள்ள பிறவியையே குறிக்கிறது.

இதை விளக்கமாகக் கூறினால், ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது மனிதனுக்கு அவன் தேவராக, மிருகமாக, பறவையாக, ஊர்வனவாக, நீர்வாழ் உயிராக, மரமாக அல்லது புல்பூண்டாகப் பிறந்த பொழுதெல்லாம் அவனுக்கு உடன் சென்று உத வும். அப்படியானால் நாம் காணும் மரங்களிலே முற்பிறவியில் கற்ற மரத்திற்கும் கல்லாத மரத்திற்கு முள்ள வேற்றுமை என்ன? அவ்வாறே மற்ற உயிரினங்களிலும் முற்பிறவியில் கற்றதற்கும் கல்லாத தற்கும் வேற்றுமையுண்டா?

மனிதர்களிலே சிலர் அறிவாளிகளாகவும் வேறு சிலர் அறிவில் குறைந்தவர்களாயும் இருத்தலை ஒப்புமை காட்டக் கருதினால், அங்கு முக்கிய குறிப்பு ஒன்றை நோக்க வேண்டும். அங்கு அறிவு சிறப்பதற்குத் தன் முயற்சியும் சூழ்நிலையும் பயன் படுகின்றனவே யன்றி பிறவிச் சுழல் இல்லை. பிறவிச் சுழலாயிருக்குமானால், எழுவகைப் பட்ட உயிரினங் களிலும் இவ்வேற்றுமை தெரிய வேண்டும்.

அடுத்தது, மனிதனாகப் பிறந்த ஒருவன் கற்றால் அக்கல்வி, அவன் மரமாகப் பிறக்கும் பொழுது பயன் படும் என்ற கருத்துப் பொருந்துமா? கல்வியை வள்ளுவர் இந்த முறையில்தான் வற்புறுத்த வேண்டுமா? கல்வி, பிறவி நீக்கத்திற்குப் பயன் படு கிறதா? அல்லது பிறவியில் இழிநிலையடைந்து கீழ் உயிராகப் பிறப்பதற்குப் பயன்படுகிறதா? அதாவது பிறவிக் கொள்கையின்படி, உயர்நிலையா கிய ஆறும் நிலையாகிய மனிதனாகப் பிறந்து கல்வி கற்ற ஒருவனுக்குக் கீழ் நிலைப் பிறவிகள் ஏற்படுமா?

அப்படி ஏற்படுமானால் அக்கல்வியால் பயன் என்ன? அது எவ்வாறு ஏமாப்பாகும்? ஏமாப்பு ஆகாத ஒன்றை 'ஏமாப்பு' எனக் கூறியது தவறு தானே?

அடுத்த குறட்பாவை நோக்குவோம்.

4. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். — 538

பரிமேலழகர்: "நீதி நூலுடையார் இவை அரசர்க்குரியன என்று உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க; அங்ஙனம் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மை இல்லையாகலான்."

இக்குறட்பா அரசியலில் இடம் பெறுவதால் அரசனுக்குச் சொல்லப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது.

மனிதர் யாவருக்கும் பொது அறமுறையுண்டு. அதிலிருந்து ஒருவன் தவறுவானானால் அவர் மனித நிலையிலிருந்தே தவறுபவனாவான்.

ஆனால் உலகில் ஒவ்வொருவருக்கும் அவரவர் ஏற்கும் பதவிக்கேற்ப ஒவ்வொரு கடமையுண்டு, நிர்வாகிக்கு ஒரு கடமை யுண்டு, அமைச்சனுக்கு ஒரு கடமையுண்டு; அரசனுக்கு ஒரு கடமையுண்டு. எவன் எக்கடமையிலிருந்து தவறுகிறானோ, அவன் அப்பொறுப்பிலிருந்து தள்ளப்படுவான். இதுவே உலக இயல்பு. அவ்வாறே அரசனுக்குரிய கடமைகளை அவன் போற்றிச் செயல் வேண்டும். செய்யாது தவறுவானானால் என்ன ஏற்படும்? அவனுடைய ஆட்சி நிலைபெறாமல் போகும், அவன் அரசனாக நீடிக்க முடியாது, அவன் அரச நிலையிலிருந்து தள்ளப்படுவான். இது தானே நடக்க முடியும்?

இதை விட்டு, அவனுக்கு, பல்லாயிரம் பிறவிகளிலும், அதாவது மரம், ஊர்வன, மிருகம் முதலாயின பிறவிகளிலெல்லாம், நன்மை இல்லை என்ற கருத்துப் பொருந்துமா?

எழுவகைப் பிறப்பிலும் நன்மை இல்லை எனக் கூற முற்பட்டால், எழுவகைப் பிறப்பிலும் நன்மை பயக்கக் கூடிய ஒன்று உளதா? நன்மை பயக்கக் கூடிய ஒன்று இருக்குமானால், பிறப்பு ஏற்படக் காரணம் என்ன? ஆறறிவு மனிதனாய்ப் பிறந்த ஒருவன், இந்நன்மையையும் பெற்றிருப்பின் அவனுக்குக் கீழ் நிலைப் பிறப்பு ஏன்? அவனுக்கும் கீழ் நிலைப்பிறப்பு உண்டெனில், பிறவி நீக்கம் யாருக்கு? என்ற கேள்விகள் தோன்றி, மேற்கண்ட உரையாசிரியர் கருத்துக்கு முரண்பட்டு விடுகின்றன.

ஆனால் வள்ளுவர் குறளிலோ தெளிவான விளக்கங்கள் உள்ளன.

பொச்சாவாமை என்ற அதிகாரத்தின் கீழுள்ள இதற்கு அடுத்த குறட்பாவாகிய

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து —539

என்னும் குறட்பா, முந்திய குறட்பாவிற்கு விளக்கம் கொடுப்பதைப் போல் அமைந்துள்ளது.

'புகழ்ந்தவை போற்றிச் செய்யாது இகழ்ந்து கெட்டாரை உள்ளுக தாந்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.'

இகழ்ச்சியின் கெட்டார் என்பதிலுள்ள 'கெட்டார்' யார்? அரச நிலையிலிருந்து தள்ளப்பட்டுக் கெட்டவரா? அல்லது கீழ் நிலை உயிர்களான மரம், பாம்பு, மிருகமாகிக்கெட்டவரா? யாரைப் பார்த்து 'உள்ள' வேண்டும்.

மரமாகவும், பாம்பாகவும், மிருகமாகவும் இருப்பதைப் பார்த்து உள்ள வேண்டுமா? அல்லது மனிதநிலையிலேயே, மன்னன் நிலையிலிருந்து தள்ளப்பட்டுக் கெட்டாரை நோக்கி உள்ளவேண்டுமா?

வள்ளுவர் கூறுவது எவ்வாறு? எது பொருந்தும்? இனி இறுதிக் குறட்பாவை நோக்குவோம.

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கழுந்தும் அளறு • 835

பரிமேலழகர் :

"பேதையாயினுன் வரும் பிறவிகளெல்லாம் தான் புக்கு அழுந்தும் நிரயத்தினை இவ்வொரு பிறப் புள்ளே செய்துகொள்ள வல்லனும்"

'எழுமை' என்பதற்கு 'ஏழுவகையான பிறவி' எனப் பொருள் கூறிவந்த பரிமேலழகர் இக்குறட்பா வில், 'வரும் பிறவிகளெல்லாம்' எனக் கூறியது ஏன்? எழுமையிலுள்ள பகுதியாகிய 'எழு' என் பதற்கு 'ஏழு' என்னும் எண்ணுப் பொருளைக் கொள்ளாது 'எழுகின்ற' என்ற வினைப்பொருளைக் கொண்டது ஏன்? ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அடுத்து அவருடைய விளக்கத்தின் இறுதியில்,

"இதனுன், அவன் மறுமைச் செயல் கூறப் பட்டது" எனக் கூறுவதன் மூலம் ஏழு வகைப் பிறப்புக் கோட்பாட்டையும் கைவிடுகிருர் அல்லவா?

இம்மை மறுமை ஆகிய இருமையில், இம்மை இவ்வுலக வாழ்க்கையைக் குறித்தால், மறுமை இவ் வுலகவாழ்வு முடிந்து நாம் இறந்த பின்னர் அடையப்போகும், நல்லுலகம் தீயுலகம் அல்லது துறக்கம் நரகம் ஆகிய இரண்டையும் தானே குறிக் கும்? அவ்வாறு பொருள் கொள்ளாது, இம்மை இப் பிறப்பு எனவும், மறுமை—மறுபிறப்பு, எனவும் பொருள் கொண்டால், இப்பிறப்பிற்கு முந்திய பிறவி, அதற்கு முந்திய பல்கோடிப் பிறவிகள், இப் பிறப்பிற்குப் பின்னர் வரப்போகும் மறுபிறவி, அதற்குப் பின்னர் வரக்கூடிய பல்கோடிப் பிறப்புகள்

இவைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை? அவை யாவற்றையும் அடக்கி இருமை என எவ்வாறு கூற முடியும்? ஆகவே இருமை என்னும் இச்சொல் பிறவிச் சுழறசிக் கொள்கைக்கு முரண்பட்டதாகும்.

பரிமேலழகர் இவ்வாறு இக்குறட்பாவுக்கு உரை கூறுமிடத்து இடறலடைவதற்குக் காரணம், இக் குறட்பாவில் சுட்டப்படும், 'எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு' என்னும் தொடராகும். இங்கு பரிமேலழகர் தனது பிறவிச் சுழற்சிக்கொள்கையி லிருந்து மாறி, கடவுள், மோட்சம், நரகம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கை யின் அடிப்படையில் பொருள்கூறுவது ஏன்? இதைக்குறித்துத் தேவநேயப்பாவாணர் அவர்கள் தனது திருக்குறள் மரபுரையில்,

> "வரும் பிறவிகளிலெல்லாந் தான் புக்க ழுந்தும் நிரயத்தினை" என்றும், "முடிவில் காலமெல்லாம் தான் நிரயத் துன்பமுடித்தற் கேதுவாங் கொடுவினைகளை" என்றும், பரி மேலழகர் கூறியிருப்பது மிக வரையிறந்திருப் பது. எழுவகைப் பிறப்பிலும் அழுந்தும் நர கென்பது உத்திக்குப் பொருந்தாதது."

எனக் கூறுகிறார்.

உரையாசிரியர் பரிதியாரும், "ஒரு சன்மத் திலே பேதைகுணம் பெற்றால் ஏழு சென்மமும் நரகம் புகுவான்" என ஒன்றுக்கொன்று மாறு பட்ட பொருந்தா உரையே கூறினர்.

மறு பிறவியில் எவ்வாறு மோட்சமோ அன்றி நரகமோ தோற்றமளிக்கும்? வருகின்ற பிறவிதோறும் நரகம் என்பது எவ்வாறு பொருந்தும்? வருகின்ற பிறவிதோறும் நரகம் என்றால் அது பொருந்துமா?

அவ்வாறு கூட்டுங்கால் அங்கு மறுபிறவிக் கொள்கை கைவிடப்படுகிறதல்லவா ?

மறுபிறவிக் கொள்கையில் உறுதியாய் நிலை நின்று அதையே வள்ளுவர் செய்யுளில் ஏற்றிக் காட்டி வரும் பரிமேலழகருக்கும் இடர்ப்பாட்டை ஏற்படுத்தும் சொல்லாக 'எழுமை' காணப்படு கிறது. 'எழுமை' என்னும் சொல்லுக்கு 'ஏழு வகைப் பிறப்பு' என்னும் பொருள் பொருந்தவில்லை என்பது பரிமேலழகராலேயே இவ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அப்படியானல் 'எழுமை' என்ற சொல் வள்ளுவரால் என்ன பொருளில் ஆளப்பட்டுள்ளது ?

நாம் மேலே கண்ட ஐந்து குறட்பாக்களுள், மூன்று குறட்பாக்களில் 'எழுமை' என்னும் இச் சொல்லுடன் மைவிகுதியையுடைய இன்னொரு சொல்லையும் இணைத்தே கூறுகிறார் வள்ளுவர். அச் சொல்லே 'ஒருமை' என்பதாகும்.

ஒருமை, எழுமை ஆகிய இரண்டும் 'மை' விகுதியையுடைய எண்ணுப் பெயர்களாகக் கொண்டால்,

ஒரு = ஒன்றையும், எழு = ஏழையும் உணர்த்து கிறது. ஒன்று எதைக் குறிக்கும்? ஏழு எதைக் குறிக்கும்? என்பதை நோக்கி 'ஒருமை' என்ன பொருளில் வள்ளுவரால் ஆளப்பட்டிருக்கிறது ? என்பதை நோக்குவோம்.

2. ஒருமை

'ஒருமை' என்னும் சொல் திருக்குறள் முழுவதிலும் நான்கு இடங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது.

1. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
   எழுமையும் ஏமாப் புடைத்து. —126
2. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து. —398
3. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
   தான் புக்கழுந்தும் அளறு. —835
4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
   தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. —974

மேலே நாம் காணும் நான்கு இடங்களினுள் மூன்று இடங்களில் 'எழுமை'யுடன் இணைத்தும் ஓரிடத்தில் மட்டும் எழுமையுடன் இணைக்காமல் தனித்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை நாம் பார்த்து வந்தபடி 'எழுமை' என்பதன் பொருள் பொருத்தமுடையதாக விளங்காததால், எழுமையுடன் இணைத்துப் பொருள் கூறப்பட்ட 'ஒருமை'யின் பொருளும் பொருத்தமற்றதாகவே இருத்தல் வேண்டும் எனலாம். ஆகவே எழுமையுடன் இணைக்காது தனித்துக் கூறப்படும் குறளையும், அதற்கு உரையாசிரியர்களால் கூறப்படும் பொருளையும் நோக்குவோம்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான்கொண் டொழுகின் உண்டு. —917

ஒருமை மகளிர்

பரிமேலழகர்	:	கவராத மனத்தினை யுடைய மகளிர்
பரிப்பெருமாள்	:	கற்புடைய மகளிர்
பரிதியார்	:	குலமகள்
காலிங்கர்	:	நெஞ்சு ஒருமைப்பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிர்
புலவர் குழந்தை	:	ஒருமனப் பெண்டிர்
மயிலை சிவமுத்து	:	ஒரே மன உறுதியோடுள்ள கற்புடைய மகளிர்
டாக்டர் மு. வ.	:	ஒரு தன்மையான கற்புடைய மகளிர்
தேவநேயப்பாவாணர்	:	ஒரே கணவனைக் காதலித்துத் தம் கற்பைக்காத்துக் கொள்ளும் குல மகளிர்
சுப்பிரமணியபிள்ளை	:	ஒரு நிலையில் மனத்தை வைத்துக்கொள்ளும் கற்புடைப் பெண்டிர்

மைவிகுதி தன்மையை உணர்த்துகிறது.
தன்மை = நிலை.

ஒரு + மை = ஒருமை = ஒருநிலை.

'ஒருமை' என்பதை 'ஒருநிலை' என்ற பொருளிலேயே வள்ளுவர் ஆண்டுள்ளார் எனத் தெரிகிறது.

ஒருமை மகளிர் = ஒருநிலை மகளிர், ஒரு மன மகளிர்

இருமனப் பெண்டிர் = வரைவின் மகளிர்

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. —920

ஆகவே 'மை' விகுதி தன்மை அல்லது நிலை இவைகளைக் குறிக்கிறது. 'ஒருமை' ஒரு நிலையைக் குறிப்பதைப் போலவே 'இருமை' என்பதும் இரு நிலைகளை விளக்குவதற்காக வள்ளுவரால் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

"இருமை என்பது இரண்டன் தொகுதி குறித்த பண்புப் பெயர்."

—மணிவிளக்கவுரை 1 பக். 601

உடலோடு கூடிய இம்மை நிலை ஒன்று, உடல் இல்லா மறுமை நிலை ஒன்று.

"இம்மை மறுமை என்னும் இரண்டின் தன்மை"
தண்டபாணிப்பிள்ளை உரை, பக். 213

மேலே காணும் விளக்கங்களிலிருந்து,

ஒருமை = ஒரு தன்மை — ஒருநிலை

இருமை = இரண்டு தன்மை — இரு நிலை

எழுமை = ஏழு தன்மை — ஏழு நிலை

எனப் பொருள் கொள்ள வள்ளுவர் குறள் வழி காட்டுகிறது

ஒன்று, ஏழு என்னும் எண்கள் குறிக்கும் பொருள் என்ன? என்பதைக் காண்போம்.

ஒன்றையும் ஏழையும் இணைத்து, வள்ளுவர் கூறும் இடங்கள் இவை தவிர குறளில் வேறிடங்கள் உளவா? நோக்குவோம்.

> ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட்சென்றார்
> வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு —1269

இக் குறட்பாவுக்குப் பரிமேலழகர் கொடுக்கும் உரை,

'சேணிடைச் சென்ற நம் காதலர் மீண்டு வரக் குறித்த நாளை உட்கொண்டு அது வருந்துணையும் உயிர் தாங்கி வருந்தும் மகளிர்க்கு ஒரு நாள் பலநாள் போல நெடிதாகக் காட்டும் என்றவாறு.

'ஏழ் என்பது அதற்குமேலாய மிக்க பன்மை குறித்து நின்றது; 'ஒருவர் கூறை எழுவர் உடுத்து' என்றாற்போல."

பரிமேலழகரின் இவ்வுரையால் 'ஒன்று—ஏழு' என்பது 'ஒன்று - பல' என்னும் பொருளையுடையது என்பது விளங்குகிறது.

காலிங்கர் : எனவே ஒருநாள் தானே அநேக நாளின் காலம் நீட்டம்கொண்டு

குழந்தை : ஒருநாள் பலநாள் போல
ஏழ் = பன்மை குறித்தது

பாவாணர் : ஒருநாளே பலநாள்போல நெடிதாகத் தோன்றும்

ஆகவே வள்ளுவர் 'ஒன்று, ஏழு' என ஏழ் என்னும் எண்ணைச் சுட்டும் இடங்கள், உண்மையில் அவ்வெண்ணைச் சுட்டாது ஒன்று—பல என்னும் பொருளையே குறித்தமையை நாம் பரிமேலழகர் உரையாலும், மற்றவர்கள் உரையாலும் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக அறிகிறோம்.

வள்ளுவர் 'ஏழு' என்னும் சொல்லை 'பல' என்னும் பொருளில் ஆண்டுள்ள வேறு இடங்கள் குறளில் உண்டா? நோக்குவோம்.

நெறுநற்றுச் சென்றார் எம்காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. —1278

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துத் தெவ்வோர்
எழுபது கோடி யுறும். —639

மேலே நாம் காணும் 'எழுநாளேம்', 'எழுபது கோடி' என்பதிலுள்ள 'எழு' என்பது 'ஏழ்' என்னும் எண்ணுப் பொருளை மட்டுமே குறிக்குமென யாருமே கூற முடியாது கூறினால் அது நகைப்புக்கிடமாகு மல்லவா? உரையாசிரியர் எவ்வாறு கூறுகின்றனர்! நோக்குவோம்.

எழுபது கோடி

பரிமேலழகர்	:	'எழுபது கோடி' என்றது மிகப் பலவாய எண்ணிற்கு ஒன்று காட்டியவாறு
குழந்தை	:	எழுபது கோடி = மிகப் பல
தேவநேயர்	:	ஏழு என்பது நிறைவான எண்ணும், கோடி என்பது பேரெண்ணுமாதலால், எழுபது கோடி யென்றது உண்மையில் அதனினும் மிகப் பெரிய தொகையையே.

வள்ளுவரும் தமது நூலை ஏழு சீர்கள் அடங்கிய குறள் வெண்பா என்னும் யாப்பிலேயே அமைத்தமை எண்ணத்தக்கது.

'ஏழு' என்பது நிறைவான எண்ணைக் குறிக்கும் என்னும் பாவாணர் அவர்களின் கருத்தைக் கிறித்தவர்களின் திருமறையான விவிலியமும் உறுதிப்

படுத்துகிறது. அங்கு ஏழு என்னும் எண், பல, அல்லது நிறைவு என்ற பொருளில் பலபடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏழு அப்பம்	—மத்தேயு	15:36
ஏழு கூடை	,,	15:37
ஏழு முறை, ஏழு எழுபது முறை		18:22
ஏழு சபை —வெளிப்படுத்தல்		1:4
ஏழு பொன்விளக்கு —வெளிப்படுத்தல்		1:12
ஏழு விண்மீன்கள்	,,	1:16
ஏழு ஆவி	,,	3:1
ஏழு தீவட்டிகள்	,,	4:5
ஏழு முத்திரை	,,	5:1
ஏழு கொம்புகள் ஏழு கண்கள்	,,	5:6
,, எக்காளம்	,,	8:6
,, இடிகள்	,,	10:4
ஏழாயிரம் பேர்	,,	11:13
ஏழு தலை ,, முடி	,,	12:3
,, வாதை ,, தூதர்	,,	15:1
,, பொற்கலம்	,,	15:7
,, மலைகள்	,,	16:9
,, மன்னர்கள்	,,	16:10

இதுவரை நாம் காணும் விளக்கங்களிலிருந்து 'ஒன்று—ஏழு' என வள்ளுவர் குறிக்கும் இடங்கள்

'ஒன்று—பல' என்னும் பொருளையே காட்டுகின்றன என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை.

எழுநாள்	—பலநாள்
எழுபது கோடி	—பலகோடி
எழுபிறப்பு	—பல பிறப்பு
எழுமை	—பல நிலை

நாம் மேலே காணும் விளக்கங்களிலிருந்து ஒருமை - எழுமை என்பது ஒரு நிலை – பல நிலை என்னும் பொருளில் ஆளப்பட்டிருப்பதாக அறிகிறோம். இவ்விளக்கம் வள்ளுவர் 'எழுமை' எனக் குறிக்கும் ஐந்து இடங்களுக்கும் பொருந்துகிறதா? என நோக்குவோம்.

1. எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு 107

பல நிலையுள்ள பல பிறப்புக்களிலும் (பிறப்பு என்பது பின்னர் விளக்கப்படும்) தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பை மறவாமல் போற்றுவர் பெரியோர்.

2. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து 126

ஒரு நிலையில் ஆமையைப்போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அஃது அவனுக்கு அவன் வாழ்வின் பல நிலை (துறை)களிலும் காப்பாகும் சிறப்புடையது.

சிறுவனாயிருக்கும் ஒருவன் அடக்கின், அது அவனுக்கு அவன், வாலிபன், கணவன், தந்தை, மாமன், தாத்தா எனத் தோன்றும் பல நிலைகளிலும் பயன்படும். பத்து வயதில் அடக்கிப் பழகிய

அடக்கம் அவனது இறப்பு வரை தோன்றும் பல வயதிலும் பயன்படும்.

3. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து —398

ஒரு நிலையில் தான் கற்ற கல்வியானது ஒருவனுக்கு அவன் வாழ்வின் பல நிலைகளிலும் காப்பாகும் சிறப்புடையது.

சிறு வயதில் கற்ற கலவியானது, பல நிலைகளிலும் இறப்பு வரை பயன்படுகிறது. ஆனால் பொருள் போன்ற மற்றச் செல்வங்கள் அவ்வாறு பயன்படுவதில்லை. கல்வியும் அடக்கமும் உள்ளத்துச் செல்வங்கள்.

வெள்ளத்தே போகாது வெந்தழலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவின்றிக்
குறைவுறாது.
கள்ளர்க்கோ மிக அரிது காவலோ மிக எளிது கல்விஎன்னும்
உள்ளத்தே பொருள் இருக்க ஊரெல்லாம் பொருள் தேடி
[உழல்வதென்ன

4. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும்இல். 538

சான்றோர் புகழ்ந்து கூறிய செயல்களைப் போற்றிச் செயல் வேண்டும். செய்யாது மறந்து சோர்ந்தவர்களுக்கு அரசன் என்ற முறையில் வர இருக்கும் பல நிலைகளிலுமே உயர்வு இல்லை.

5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கழுந்தும் அளறு. — 835

பல நிலைகளிலும் தான் புகுந்து அழுந்தக் கூடிய துன்பத்தை பேதையானவன் பேதை என்னும் அந்த ஒரு நிலையிலேயே தேடிக்கொள்ளுகிறான்.

தன் வாலிபப் பருவத்தில் பேதையானவன் செய்யும் செயல், அவனதுவருங்காலம்முழுவதையும் துன்பமயமாக்கி விடுகிறதை நாம் காண்கின்றோமல்லவா? தீய உறவில் தம் உடலைக் கெடுத்துக் கொண்டு துன்பக் குழியில் தாமே விரைந்துவிடும் பேதையான வாலிபர் எவ்வளவு பேர்?

குழைசேறுள்ள குழியில் அகப்பட்டுக்கொண்டவன் அடையும் துன்பம் இங்கு காட்டப்பட்டது. தானே புகும் நிலையை 'புக்கு' என்னும் சொல்லால் விளக்கினார்.

'அளறு' என்பதற்கு தம்முடைய பிறவிச் சுழற்சிக்கொள்கைக்கும் முரண்பட்டு 'நிரயம்' எனப் பொருள் கொண்ட பரிமேலழகரின் உரையின் பொருந்தாமையை உள்ளுக. வள்ளுவர், நிரயமாகிய இன்னா உலகை குறிக்க இயற்கையாக உள்ள 'இருள்' என்னும் சொல்லையே பயன்படுத்துகிறார் என்பது நோக்கத் தக்கது. இது பின்னர் விளக்கப்படும்.

'நிரயம்' என இவ்விடத்தில் பொருள் கொள்ளுவது மோட்ச நரகக் கொள்கைக்கும் பொருந்ாததொன்றாகும்.

துன்பத்தைத் தானே வலியச் சென்று அடைதலை, அளறு நிரம்பிய புதை குழியில் தானே வலியச் சென்று மாட்டிக்கொண்டு துன்பப்படும் தன்மையுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் வள்ளுவர்.

புக்கு, அழுந்தும் என்ற இரு சொற்களும் இதைத் தெளிவுபடுத்துகின்றன.

1. மேலே காணும் விளக்கங்கள் நடைமுறைக்கு ஏற்றவையாக விளங்குகின்றன.

2. 'எழுமை' என்பதற்கு 'ஏழுவகையான பிறவி' 'பல பிறவி' எனப் பொருள் கொள்ளுங்கால் ஏற்பட்ட முரண்பாடுகள் யாவும், எழுமை = பல நிலை எனப் பொருள் கொள்ளுங்கால் நீங்குகின்றன.

3. 'எழுமை' என்னும் சொல்லை 'ஏழுவகைப் பிறப்பு' என்ற பொருளில் திருக்குறளைத் தவிர வேறு எங்குமே தமிழ் இலக்கிய உலகில், கையாளப்பட்டதாகத் தெரிய வில்லை. டாக்டர் அ. தாமோதரன் அவர் களால் தயாரிக்கப்பட்ட "திருக்குறள் மேற்கோள் விளக்கத்"திலோ அல்லது கி. வா. ஜ அவர்களால் தொகுக்கப்பட்ட 'திருக்குறள் ஆராய்ச்சி'ப்பதிப்பிலோ 'எழுமை' என்ற சொல் வேறு இலக்கியங் களில் ஆளப்பட்டுள்ளமைக்கான குறிப்பு எதுவும் இல்லை.

ஆகவே வள்ளுவரால் ஆளப்பட்டுள்ள 'எழுமை' என்னும்சொல்லுக்கு 'ஏழுவகைப் பிறவி' என்ற பொருள் திருக்குறளுக்கு உரை எழுதிய உரையாசிரியர் சிலராலேயே கொடுக்கப்பட்டது என்பதை எண்ண வேண்டியுள்ளது.

ஆனல் அப்பொருளில் இச்சொல் குறளினுள் ஆளப்பட வில்லை என்பது இப்போது உறுதிப்படு கிறதெனலாம். அடுத்து வள்ளுவரால் ஆளப்பட் டுள்ள 'எழுபிறப்பு' 'பிறப்பறுக்கல்' 'பிறவிப்பெருங் கடல்' என்னும் சொற்களை நோக்குவோம்.

பிறப்பு.

'எழுமை' என்ற சொல்லுக்கு 'ஏழுவகையான பிறப்பு' என்னும் பொருள் இல்லை எனக்கொண்டா

லும், வள்ளுவர்க்கு எழுபிறப்புக் கொள்கை உடன்பாடு இல்லை எனக் கொள்ள முடியுமா? பிறப்பில் ஏழுவகையைப் பற்றிய வாதம் இருப்பினும், பல பிறவிக் கொள்கை வள்ளுவர்க்கு உடன்பாடு தானே? ஆகையால் தானே அவர் தம் நூலுள் தெளிவாக எவ்விதக் கருத்து வேறுபாட்டிற்கும் இடமின்றி 'எழுபிறப்பு' என்னும் சொல்லை ஆண்டுள்ளார்? 'ஏழ்' என்பது 'பல' என்னும் பொருளையே உணர்த்துவதாகக் கொண்டாலும் 'பல பிறப்பு' என்ற பொருள் தெளிவாகக் கூறப்படுகின்றதே?

> எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
> விழுமந் துடைத்தவர் நட்பு. — 107

என்ற குறட்பாவில் 'எழுபிறப்பு' தெளிவாகக் கூறப்படுவதுடன்

> பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவனடி சேராதவர் — 10

என்னும் கடவுள் வாழ்த்துச் செய்யுளினுள் பிறவிப் பெருங்கடலாக உவமிப்பதன் மூலம், பிறவிக் கடலைக் கடப்பது இறைவன் துணையின்றி முடியாது என்பதையும்

> மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல் பிறப்பறுக்கல்
> உற்றார்க்கு உடம்பும் மிகை. — 345

என்ற துறவு அதிகாரச் செய்யுளின் மூலம் பிறப்பறுக்க வேண்டிய தேவையையும் கூறும் வள்ளுவர் பல பிறவிக் கோட்பாடுடையவர் தானே? என்ற வினாக்கள் எழுகின்றன. அவற்றிற்கான விடைகளை நோக்குவோம்.

மேலே நாம் கண்ட மூன்று குறட்பாக்களிலும் வள்ளுவர் கூறியுள்ள மூன்று தொடர்களையும் எடுத்துக் கொள்ளுவோம்.

1. எழுபிறப்பு.
2. பிறவிப் பெருங்கடல்.
3. பிறப் பறுக்கல்.

இம்மூன்று தொடர்களும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டவை.

1. எழுபிறப்பு = பல பிறப்புகள்
2. பிறவிப் பெருங்கடல் = பிறப்பாகிய பெருங்கடல்.
3. பிறப்பறுக்கல் = பிறப்பை அறுத்து விடுதல் அல்லது துண்டித்தல்.

பிறப்பை அடிப்படையாகக் கொண்ட மேற் காணும் மூன்று தொடர்களும் பிறவிச் சுழற்சிக் கொள்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கூறப்பட்டவையா? பிறப்பு யாருக்குஉண்டு? பிறக் காமல் உலகில் தோன்றியவர்கள் யாரேனும் உளரா?

உலகிலுள்ள யாவருமே பிறந்தவர்கள் தான். இதில் கருத்து வேறு பாடு யாருக்குமே இருக்க முடியாது. ஆகவே 'பிறப்பு' எல்லாக்கொள்கையினர்க் குமே பொதுவானது தான்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையை ஏற்றுக் கொள் ளாதவர்களும் பிறப்பு தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வர்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையினர் கூற்றில் பிறப்பு, உடலுக்கு உடல் மாறிக்கொண்டிருக்கிறது

என்பர். ஆகவே பிறப்பு இரு கொள்கையினர்க்குமே பொதுவானது தான். இரு கொள்கையினருமே, இவ்வுலகில் பிறப்பின் மூலமாக மட்டுமே தான் வந்தவர்கள். ஆகவே 'பிறப்பு' என்ற சொல்லால் இருவருக்குமே வேற்றுமை இல்லை.

1. எழுபிறப்பு:- பல பிறப்புகள்—இது பிறவிச் சுழச்சிக்காரர்கள், அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஆகிய இருதிறத்தாருக்குமே பொருந்துவதாகத் தெரிகிறது.

   பிறவிச் சுழற்சி:- பல உடல்களில் பிறக்கும் உயிர்.

   மறுப்பவர்:- பல பிறப்புக்களையுடைய தலைமுறை-பல உயிர்-பல உடல்.

   (1) ஓரே உயிர் பல உடல்களில் தோன்றும் பல பிறப்பு.

   (2) பல உயிர் பல உடல்களில் தலைமுறை தலைமுறையாகப் படிப்படியாகத் தோன்றும் பல பிறப்பு.

2. பிறவிப் பெருங்கடல்:-

   (1) ஓரே உயிர் பல உடல்களில் தோன்றும் பிறவியாகிய கடல்.

   (2) பல உயிர் பல உடல்களில் தலைமுறை தலைமுறையாகத் தோன்றும் பிறவியாகிய கடல்.

3. பிறப்பறுக்கல்

   (1) ஒரு உயிர் தனக்கு வரப்போகும் அடுத்த உடலாகிய பிறப்பை அறுத்தல்.

   (2) தலைமுறையில் தனக்கு அடுத்தபடியாகப் பிறக்கப்போகும் பிள்ளைகளாகிய பிறப்பை அறுத்தல். அதாவது துறவறம் மேற்கொள்ளல்.

மேலே நாம் கண்ட விளக்கப்படி மேலே காணும் மூன்று தொடர்களும் இரு கொள்கையினர்க்குமே பொதுவாகக் காணப்படுகின்றன.

ஆகவே இத்தொடர்களை மட்டுமே வைத்துக் கொண்டு வள்ளுவர் கொள்கையை நாம் காண முடியாது. இத்தொடர்களை அவர் ஆண்டுள்ள இடத்தைக் கொண்டு, அவ்விடம் முழுமையாகத் தரும் பொருளைக்கொண்டு, வள்ளுவர் உள்ளக்கிடக்கையை நாம் காணமுடியும். வள்ளுவர் கொள்கை அப்போது நமக்கு விளக்கம் பெறும். ஆகவே இத்தொடர்கள் ஆளப்பட்டுள்ள குறட்பாக்களை முறையே நோக்குவோம்.

3. எழுபிறப்பு

இத்தொடர் திருக்குறள் முழுவதிலுமே இரண்டு குறட்பாக்களில் மட்டும் ஆளப்பட்டுள்ளது.

எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. — *107*

தங்களிடத்து ஏற்பட்ட துன்பத்தைத் துடைத்தவர் நட்பினை, நன்றியறிதலுள்ளவர்கள் பல நிலையில் தோன்றுகின்ற பல பிறப்புக்களிலும் மறவாமல் போற்றுவர்.

இங்கு நாம் காணவேண்டியது:- வள்ளுவர் கூறும் நன்றியறிதலுள்ளவர்கள், பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குப் பொருத்தமானவர்களா? அல்லது தலைமுறைக் கொள்கைக்குப் பொருத்தமானவர்களா? என்பதாகும்.

பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி கொண்டால்:- இந்நன்றியறிதலுள்ளவர்கள், பல பிறவிகளிலும் அதாவது ஏழுவகையாக விளங்குகின்ற பல்லாயிரம் பிறவிகளிலும் தங்கள் விழுமந்துடைத்தவர் நட்பினை மறவாமல் போற்றுவர்.

இது பொருந்துமா? ஒரு பிறவியில் ஒருவர் செய்த நன்மையைப் பல்லாயிரம் பிறவியிலும் நினைக்க முடியுமா? நினைக்கக் கூடியவர்கள் இரு

வரை உலகில் தோன்றியதுண்டா? முடியாதெனில் முடியாக் கருத்தை வள்ளுவர் கூறுவாரா?

அடுத்து அவ்வாறு நன்றியறிதலுள்ளவர்களுக்குப் பல பிறவி யுண்டா? அவர்களுக்கும் பல பிறவியுண்டானால் பிறவி நீக்கம் யாருக்கு? இக்கேள்விகளுக்கு பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி விடை கொடுக்க முடியாது. ஆகவே வள்ளுவர் கூறும் நன்றியறிதலுள்ளவர்களை பிறவிச் சுழற்சிக் கொள்கையில் காண முடியாது. கண்டால் பொருந்தாது எனத் தெரிகிறது. அடுத்த கொள்கையை நோக்குவோம்.

தலைமுறைக் கொள்கைப்படி கொண்டால்:- நன்றியறிதலுள்ளவர்கள் பல நிலையில் தோன்றுகின்ற பல பிறப்புக்களிலும், அதாவது பல தலைமுறைகளிலும் தங்கண் விழுமந்துடைத்தவர் நட்பினை உள்ளுவர்.

பல நிலையில் தோன்றும் பல தலைமுறைகளிலும் நினைப்பர் என்னும் இக்கருத்து பொருத்தமுடையதாகத் தோற்றமளிக்கிறது. பாட்டன், தந்தை, மகன், பேரன் ஆகிய பல தலைமுறைகளிலும், பொருளாதாரத்தாலும், பதவியாலும் ஏற்படுகின்ற பல நிலைகளிலும் தங்களுக்கு நன்மை செய்தவர்களை, அதாவது தங்களுக்கு ஏற்பட்ட இடுக்கணை நீக்கியவர்களை நினைப்பர். இக்கருத்தையும் செயல்முறையையும் நாம் அன்றாடம் காணுகிறோம் அல்லவா? இலக்கியத்திலும் தம்முன்னோரின் விழுமந்துடைத்த மணிமேகலா தெய்வத்தின் பெயரை தன்மகளுக்கு வைத்து, விழுமந்துடைத்தவர் நட்பினை எண்ணிய கோவலன் செய்தியை

'விஞ்சையின் பெயர்த்து, விழுமந் தீர்த்த
எம்குல தெய்வப் பெயர் ஈங்கு இடுக எனா:
அணிமேகலையார் ஆயிரங் கணிகையர்,
'மணிமேகலை' என வாழ்த்திய ஞான்று;

சிலப்பதிகாரம் 15:36-39

எனச்சிலம்பு செப்புகிறது. ஆகவே நன்றியறி தலுள்ளவர்கள் தலைமுறை தலைமுறையாக எந்த நிலையிலும் (கோவலன் தன் நிலை தவறி பொதுமக ளிரிடத்து வாழ்ந்த காலையும்) உள்ளுவர் என்பது தெளிவுபடுகிறது.

ஆகவே இக்குறட்பா தலைமுறைக் கொள்கை மட்டுமே வள்ளுவர்க்கு உண்டு என்பதை எடுத்துக் கூறுகிறது. 'எழுபிறப்பு' என வள்ளுவர் கூறும் இடங்கள் குறட்பா முழுவதிலுமே இரு இடங்கள் மட்டுமே என்பதைப் பார்த்தோம். இப்போது அடுத்தக் குறட்பாவை நோக்கி வள்ளுவரின் உள் ளத்தை அறிவோம்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். — 62

பழி இல்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றால் பல பிறப்பிலும் தீயவை தீண்டாது.

பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி கொண்டால்:- நல்ல பிள்ளைகளைப் பெற்றால் பல்லாயிரம் பிறவிகளி லும் பழிபிறங்கா. பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி தந்தையின் செயலுக்கும் மகன் செயலுக்கும் எவ் விதத் தொடர்பும் கிடையாது. அவரவர் பழ வினையே அவரவரை நடத்துவதாகும். ஆகவே பண்புடைய மக்கள் தகப்பன் வினையை மாற்ற முடியும் என்ற கருத்து பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முரண்பட்டதாகும்.

பண்புடைய மக்களைப் பெற்ற பண்பாளனுக்குப் பல பிறவியுண்டா? பிறப்பே தீமையால் வருவது தானே? மறு பிறப்பிலும் தீயவை தீண்டாத மறு பிறப்பு உண்டா? அவ்வாறு உண்டு எனக் கூறி ஞல் அது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முரண் பட்டதாகுமல்லவா?

ஆகவே வள்ளுவர் இக்குறட்பாவையும் பிறவிச் சுழற்சிக் கொள்கையின் அடிப்படையில் கூறியிருக்க முடியாது. ஆகவே தலைமுறைக் கொள்கை அடிப் படையில் நோக்குவோம்.

தலைமுறைக் கொள்கை: பழி பிறங்காப் பண்புடை மக்கட்பெறின் எழுபிறப்பும் அதாவது பல தலைமுறைகளிலும் தீயவை தீண்டாது.

இக் கருத்து நடைமுறைக்கு ஒத்துவரக் கூடிய நல்ல கருத்தாக விளங்குகிறது. பண்புடைய மக்கள் பிறக்கும்பொழுது பண்புடைய தலைமுறையினர் உருவாகின்றனர். பண்புடைய தலைமுறையினர் தோன்றுங்கால், பல தலைமுறையிலும் தீயவை தீண்ட வேண்டிய தேவை இல்லை. ஆகவே பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெற்றால் பெற்ற அவனுடைய பரம்பரையினரைப் பல தலைமுறை களிலும் தீமை அணுகுவதில்லை.

4. பிறப்பறுக்கல்

இத் தொடர் குறட்பா நூல் முழுவதிலும் இரு இடங்களில் மட்டுமே ஆளப்பட்டுள்ளது. அவ்விரு இடங்களும் துறவற இயலில் 'துறவு' என்னும் அதிகாரத்தின் கீழேயேயுள்ளன. அவைகளை முறையே நோக்குவ்வாம்.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை. 345

பிறப்பைத் துண்டிக்கும் நிலையை அடைந்தவர்களுக்கு அவர்களுடைய உடம்பும் மிகையான பொருளாகும். ஆகவே அவர்களுக்கு வேறு தொடர்பு ஏன் வேண்டும்?

இக் குறட்பாவிற்கு பிறவிச் சுழற்சியின்படி பொருள் கொண்டால் :

பிறவிச் சுழற்சியில் இடைவிடாது தோன்றும் பிறவியைத் துண்டிக்கும் நிலையை அடைந்தவர்களுக்கு மற்றத் தொடர்பு ஏன்? அவர்களுக்கு அவர்களுடைய உடம்பும் மிகையான பொருளாகும்.

இக்குறட்பா துறவறவியலின் துறவு அதிகாரத்தைச் சேர்ந்ததாகும். பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி எல்லோருமே பிறவி நீக்கத்துக்காக முயற்சி எடுத்துப் பிறவி நீக்கம் பெறவேண்டும். பிறவி நீக்கம் அடைந்தமையை இறப்பிற்குப் பின்னரே அறிய முடியும். உலகில் பிறந்து பிறவிக்குட்பட்டு

வாழும்பொழுதே "நான் பிறவி நீக்கத்தை அடைந்துவிட்டேன்" என யாரும் கூற முடியாது. பிறவி நீக்கத்திற்கான முயற்சியில் ஈடுபட்டவர் என்ற அளவே அவர்களுக்கோ மற்றவர்களுக்கோ அறியக் கூடியதாகும்.

ஆனால் வள்ளுவர் இங்கு 'பிறப்பறுக்கல் உற்றார்' அதாவது 'பிறவி நீக்கத்தை அடைந்தார்' எனக் கூறுவது பொருந்துமா? 'பிறப்பெடுத்து அதில் வாழ்ந்துகொண்டிருக்கும்பொழுதே பிறப்பறுக்கல் உற்றார்' என்பது பொருந்தாக் கருத்தல்லவா?

அடுத்தது துறவிகள் மட்டுமே 'பிறப்பறுக்கல் உற்றார்' என்றால் இல்லறத்தார் பிறவிச் சுழலில் சிக்கித் தவிப்பவர்களே என்றாகிறதல்லவா? ஆனால் நூலில் இல்லறம் துறவறம் ஆகிய இரு அறங்களுள் வள்ளுவர் இல்லறத்திற்கே முதலிடம் கொடுத்ததுடன்,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன். —46

எனக் கூறிய வள்ளுவர் இல்லறத்தார்க்குப் பிறவி நீக்கம் இல்லை; துறவறத்தார்க்கே பிறவி நீக்கம் உண்டு எனக் கூறுவாரா? அவ்வாறு கூறுகிறார் என்பது பொருந்துமா? ஆகவே இக்குறட்பாவிற்கு பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பொருள் கண்டால் அது பொருந்தாக் கருத்தாகவே காட்சி தருகின்றது. அப்படியானால் தலைமுறைக் கொள்கைப் படி பொருள் காண்போம்:—

பிறவியைத் துண்டிக்கும் நிலையை அடைந்தவர்க்கு அதாவது மகன் பேரன் என்ற பிறவித் தொடர்பு ஏற்படாதவாறு, துறவு நிலையை ஏற்றமையால் பிறவி அதாவது பரம்பரை துண்டிக்கப்பட்டு விட்டவர்க்கு மற்றத் தொடர்ப்பாடு எவன்கொல்?

அவர்களுக்கு அவர்களுடைய உடம்பு கூட மிகைப் பொருளாகவே தோற்றமளிக்கும்.

இங்கு வள்ளுவக் கருத்துக்கு முரண்பாடு இல்லை. இறைவனை இல்லறம் துறவறம் ஆகிய இரண்டு வழிகளிலும் அடையலாம். இரண்டில் இல்லறம் இயல்பானது. முதன்மையானது. ஏனெனில் எந்தத் துறவியுமே இல்லறத்தின் பயனாகத் தோன்றியவனே. இல்லறமே இல்லெனின் துறவறமும் இல்லை. ஆனால் இல்லறத்தான் துறவிலிருந்து தோன்றுபவனல்லன். ஆகவே இல்லறம் முதன்மையானது. இறைவனால் இயல்பாகப் படைக்கப் பட்டது. பரம்பரையாய் மனிதர் வாழ்வதற்கு அடிப்படையான நிலைக்களனானது.

ஆகவே பிறப்பறுக்கல் இல்லாத வழியாகிய இல்லறத்தின் மூலமாகவோ அல்லது பிறப்பறுக்கல் உற்ற வழியாகிய துறவறதின் மூலமாகவோ, ஏதாவது ஒரு வழியின் மூலமாக இறைவனை அடையலாம். பிறப்பறுக்கல் உற்ற வழியாகிய துறவறத்தை மேற்கொண்டவர்களுக்கு மற்ற தாய், தந்தை, அண்ணன், தம்பி என்ற தொடர்ப்பாடு ஏன்! சுற்றத்தாரும் மற்றோரும் அவர்களுக்குச் சமமே. அவர்களுடைய உடம்பும் அவர்களுக்கு மிகையே. ஏனெனில் அவர்கள் உடலுக்குரியவைகளை நோக்காது உள்ளம், ஆன்மாவிற்குரியவைகளையே நோக்குகிறவர்களாகிறார்கள்.

எனவே, இக்குறட்பாவிற்கு தலைமுறை கொள்கையே சரியான விளக்கமாகிறது. அடுத்த குறட்பாவை நோக்குவோம்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 349

உலகப் பற்றுதல் நீங்கும்பொழுதே பிறப்பு துண்டிக்கப்படும் மேலும் உலகத்தின் நிலையாமை யும் தெள்ளென விளங்கிக் காணப்படும்.

இதற்குப் பிறவிச் சுழற்சியின்படி பொருள் கொண்டால் :—பற்று நீங்கும்பொழுதே பிறவிச் சுழற்சி அறுபடும். மற்று நிலையாமை காணப்படும். இக் குறட்பா பிறவிச் சுழற்சிக் கொள்கையுடை யார்க்கும் வள்ளுவர்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைத் தெற்றென விளக்கிக் காட்டும் பாவாகக் காட்சி அளிக்கின்றது. இக் குறட்பாவிற்கு விளக்கம் கொடுக்குங்கால் பிறவிச் சுழற்சிக் கொள்கையுடைய உரையாசிரியர் அத்தனை பேரும் மிகவும் இடர்ப்பாடு அடைகின்றனர். ஏனெனில் அவர்கள் கொள்கைக்கு முரண்பட்ட கருத்து கூறப் படுகிறது. ஆகவே இதை ஆழ்ந்து நோக்கு முகத்தான் உரையாசிரியர்களை முதலில் நோக்கு வோம்.

பரிமேலழகர் : ஒருவன் இருவகைப் பற்றும் அற்ற பொழுதே அப் பற்றறுதி அவன் பிறப்பை அறுக்கும். அவை அறாதபொழுது அவற்றால் பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்

மணக்குடவர் : ஒருவன் யாதொரு பொருளோடும் பற்றற்ற பொழுதே அது பிறப்பை அறுக்கும் ; அதனை விடாதபோது நிலையாமை காணப் படும் என்றவாறு.

இஃது எல்லாப் பற்றினையும் அறுக்கப் பிறப்பு அறும் என்றவாறு.

பரிதியார்: மூன்று வகை ஆசையுந்துறந்த பேர்க்குப் பிறப்பு இல்லை ; இதில் ஒன்றிரண்டு துறந்தா

லும் பிறப்பு உண்டு; கீழ்ப்படுத்தாது மேற் படுத்தும் என்றவாறு.

காலிங்கர்: இங்ஙனமே பற்றற்ற இடத்து மற்று அப்பொழுதே அப்பற்றறுதியாகிய நல் துறவு தன் பிறப்பறுக்கும்; எனவே முத்தியை எய்தும். மற்று ஏனைய எல்லாம் பற்றோடு வருதலால் அந்தந்தப் பொருள் பற்றி நின்ற நெஞ்சோடும் பிறந்தும் இறந்தும் திரிந்து உழல வேண்டுத லால் இந்த நிலையாமையே எப்பொழுதும் காணப்படும் இவனால்; எனவே, எஞ்ஞான்றும் முத்தியின்பம் காணமாட்டான் என்பது பொருள் ஆயிற்று என்றவாறு.

இனி இவ்வுலகத்து மக்கட் பிறந்தோரில் சிறந் தோராகிய சான்றோர் முன்னர்த் தம் குலத்தியல் பாகிய இல்லறம் இயற்றியப் பின்னர் மற்றதன் பயனாகிய துறவறமியற்றுதற்கு அதனை முனிந்து நீத்துப்போந்து துறவறம் இயற்றிய பின்னர் இத் துறவறத்தின் பெரும் பயனாகிய முத்தி இன்பத்து முயன்று அமைதல் இயல்பாதலால் இதன் பின்னரே மெய்யுணர்தல என்னும் பெயரினன் அதனை அறி விக்கின்றது மேலை அதிகாரம்.

நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை: ஒருவன் பற் றுக்கள் அற்றபொழுதே, அப் பற்றறுதி அவன் பிறப்பை அறுக்கும் அப்பற்றுக்கள் அறாத பொழுது, அப் பற்றுக்களாற் பிறந்திறந்து வருகிற நிலையாமையே பயனாகக் காணப் படும்.

மயிலை சிவ முத்து: யான் எனது என்னும் ஆசை நீங்கியவுடனே அந்தப் பற்றற்ற நிலை பிறவித் துன்பத்தை ஒழிக்கும். அந்தப் பற்றினை

நீக்கிக் கொள்ளாதவர்களிடம் பிறப்பும் இறப்பும் ஆகிய நிலையாமையே காணப்படும்.

சாமி சிதம்பரனார்: ஆசையற்றபொழுதே பிறவியை ஒழிக்கும், ஆசையறாதபோது மாறிமாறி வரும் பிறவித் துன்பம் உண்டாகும்.

ஆசையற்றால்தான் பிறவி நீங்கும். ஆசை பல பிறவிகளைத் தரும்.

ஓர் பழைய உரை: ஒருவன் இருவகைப் பற்றும் அற்றபொழுதே அப்பற்றற்றது அவன் பிறப்பை அறுக்கும். பற்று அறாதபோது பிறவிக்கடல் காணப்படும்.

கவிராஜ பண்டிதர்: மற்று நிலையாமை காணப்படும் = அந்த ஆசையை விடாதபோது நிலையில்லாததாகிய பிறவிச் சமுத்திரத்தைக் காண்பான்

வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் குறிப்பு: மற்று = இங்கே, எதிர்மறையானதை யுணர்த்தியதனால், வினைமாற்றுப் பொருளது. நிலையாமை = யாக்கை நிலையின்மை. நிலையாமை காணப்படும் = பிறப்பொழியாது.

மேலே நாம் காணும் உரையாசிரியர்களின் விளக்கங்களிலிருந்து நாம் அறிவது என்ன?

பற்றற்றகண்ணே பிறப்பறுக்கும்: இத்தொடரில் 'பிறப்பறுக்கும்' என்பதற்கு உரையாசிரியர்கள் யாவரும் ஒருமித்து அவர்களுடைய பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு ஏற்ப 'பிறப்பு இல்லை' அல்லது 'பிறப்பைத் துண்டிக்கும்' என உரை கூறுகின்றனர். ஆனால், 'பற்றற்ற கண்ணே' என்பதிலுள்ள 'பற்று' என்பதற்கு பரிமேலழகர், 'இருவகைப் பற்று'

என்னும், மணக்குடவர் 'யாதொரு பொருளோடும் பற்று' எனவும், பரிதியார், 'மூன்று வகை ஆசை' எனவும், காலிங்கர், 'நல்துறவு' எனவும், மயிலை சிவமுத்து அவர்கள் 'யான் எனது என்னும் ஆசை' எனவும், சாமி சிதம்பரனூர் 'ஆசை' எனவும் பொருள் கூறுகின்றனர்.

ஆகவே பிறபறுப்பதற்கு மூலகாரணமானது எது? என்பதில் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருத்தலை நாம் அறிகிறோம். இக்கருத்து வேறுபாட்டிற்கான காரணம் என்ன? பிறவிச் சுழற்சிக் கொள்கையில் பிறவி நீக்கத்திற்காகக் கூறப்பட்டிருக்கும் காரணமும், வள்ளுவர் குறட் பாவிலுள்ள பொருளும் வேற்றுமையுடன் காணப் படுதலே. அவ் வேற்றுமையை நீக்கி, வள்ளுவர் குறட்பாவிற்கும் தங்களுடைய பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குமிடையே ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பாலம் அமைக்கின்றனர். ஆகவே அவர்களுடைய பாலங்கள் வேறு வேறுபட்ட உரு வில் காட்சி தருகின்றன.

அடுத்தது 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்னும் வள்ளுவத் தொடர் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குப் பொருந்துமா? பிறப்பு எப்போது அறுபடும்? பிறப்பிலிருந்து நீங்கும்போது அல்லவா? பிறந்து வாழ்ந்துகொண்டு பிறவித்தளையின் கட்டில் இருக்கும் ஒருவன் பிறப்பை அறுத்துவிட்டான் என்பது பொருந்துமா? பிறப்புக்குட்பட்ட வாழ்வில் இருக்கும் ஒருவன் பிறவிநீக்கம் பெற்றுவிட்டான் என்பது பொருந்தாக் கருத்தெனக் கண்டோம்.

பொருந்தாததைப் பொருத்த முயற்சிக்கும் பொழுது இடர்ப்பாடு அடைதல் இயல்பே. அவ்-

விடர்ப்பாட்டையே உரையாசிரியர் அடைந்துள்ளனர்.

அடுத்தது 'நிலையாமை காணப்படும்' என்னும் தொடராகும் இதிலுள்ள 'நிலையாமை' என்னும் சொல்லைப் பார்ப்போம்.

இதற்குப் பரிமேலழகர், 'பிறந்து இறந்து வருகின்ற நிலையாமை' எனவும், மணக்குடவர், 'பிறப்பு அரு நிலையாமை' எனவும், பரிதியார், 'பிறப்பு உண்டு' எனவும், காலிங்கர் 'பிறந்தும் இறந்தும் திரிந்தும் உழல வேண்டுதலாகிய நிலையாமை' எனவும், நாகை சொ. தண்டபாணிப்பிள்ளையவர்கள், 'பிறந்திறந்து வருகிற நிலையாமை' எனவும், மயிலை சிவமுத்து 'பிறந்திறந்து வருகிற நிலையாமை' எனவும், சாமி சிதம்பரனார் அவர்கள் 'மாறிமாறி வரும் பிறவித் துன்பம்' எனவும், பழைய உரையில் 'பிறவிக்கடல்' எனவும், கவிராஜ பண்டிதர் 'பிறவிச் சமுத்திரம்' எனவும் கூறுகின்றனர்.

இவர்கள் 'நிலையாமை' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளக் காரணம் என்ன? இவர்களுக்கு இக் குறட்பாவை பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பொருள்கொள்ள முடியா நிலையில் ஏற்பட்ட இடர்ப்பாடேயாகும். இக்குறட்பாவிலுள்ள 'நிலையாமை' என்னும் சொல்லுக்கு இவ்வாறு பொருள் கொண்ட உரையாசிரியர்கள், 'நிலையாமை' என்னும் அதிகாரத்திற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்கள் என நோக்குவோம்.

பரிமேலழகர் : அவற்றுள் நிலையாமையாவது, தோற்றமுடையன யாவும் நிலையுதல் இலவாம் தன்மை.

மணக்குடவர் : நிலையாமையாவது, மயக்கத்தினால் 'தான்' என்று நினைத்திருக்கின்ற யாக்கையும், 'தனது' என்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலைநில்லாமையைக் கூறல்.

பரிதியார் : நிலையாமையாவது செல்வம், யாக்கை, இளமை இதுகள் நிலையல்ல என்றவாறு.

பழைய உரை : அஃதாவது தோற்றமுடையன யாவையும் நில்லாது இறந்து போமென்றது.

நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை : தோன்றுவன யாவும் நிலையாத தன்மை.

சாமி சிதம்பரனார் :- உலகப் பொருள்கள் நிலையற்றவை என்பதை அறிதல்.

மேலே நாம் காணும் விளக்கங்களிலிருந்து உரையாசிரியர்கள் 'நிலையாமை' என்னும் இச்சொல்லுக்கு இரண்டு இடங்களிலும் இரு வேறு உரை கூறுவதைக் காணுகிறோம்.

இவ்வாறு இவர்கள் மாறுபட்டுப் பொருள் உரைக்கக் காரணம் 'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' என்ற தொடருக்குப்பின்னர், 'மற்று நிலையாமை காணப்படும்' என்ற தொடருக்குப் பொருள் கூற அவர்களால் கூடாமையே. ஏன்? பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பிறப்பறுக்கலாகிய, பிறவி நீக்கம் பெறுதலே இறுதிப் படியாகும். அதற்குப் பின்னர் வேறொன்றும் கூற வேண்டியதில்லை. கூறவும் முடியாது. ஆனால் வள்ளுவர் 'பிறப்பறுக்கும்' என்று

கூறிய பின்னர் 'நிலையாமை காணப்படும்' எனவும் கூறுவதால் இது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டு விடுகிறது. ஆகவே இவ் விடத்தில் வள்ளுவர் கூறும் நிலையாமை எது? என் பது உரையாசிரியர்களுக்கு விளங்காக்காரணத்தால் பொருத்த மற்ற முறையில், பிறவிச் சுழற்சிக் கொள் கைக் கேற்ற முறையில் 'நிலையாமை' என்னும் முந்திய அதிகாரத் தலைப்பிற்குக் கொடுத்த விளக் கத்திலும் முரண்பட்ட நிலையில் பொருள் கூறிச் சென்றனர்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையில் விளக்கம் கூற வந்த உரையாசிரியர்களை இவ்வளவு திணறடித்த இக்குறட்பாவுக்கு குலமுறைக் கொள்கைப்படி பொருள் காண்போம்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் :- துறவறத்தை மேற்கொண்டு இல்லறத்தின் பாற் பற்றினை விட்ட அப்பொழுதே பிறவித் தொடர்ச்சி யாகிய மகன், பேரன் போன்ற பிறப்பு அறுபடும்.

மற்று நிலையாமை காணப்படும் :- அது தவிர, உறவினர் நிலையாமை, யாக்கை நிலையாமை, பொருள் நிலையாமை முதலியன அவனுக்கு வெளிப்பட்டுத் தோன்றும்.

இக்குறளில் மூன்றுபடிகளை வள்ளுவர் விளக்கு வதை நாம் காணுகின்றோம்.

முதல்படி :- பற்றற்ற உள்ளம் ஏற்படல்,

இரண்டாம்படி :- பற்றற்ற உள்ளம் தோன்றியதால் பிறப்பறுத்துத் துறவறத்தை மேற்கொளல்.

மூன்றாம்படி :- துறவறத்தை மேற் கொண்டமையால் நிலையாமையை உள்ளபடி உணர்தல்.

தலைமுறைக் கொள்கைக் கிணங்கக் கொண்ட மேற்கண்ட விளக்கம் எளிமையானது. திருக்குறளுக்கு மிகவும் பொருந்துவது. ஆகவே வள்ளுவர் தலைமுறை கொள்கையை மட்டுமேயுடையவர் என்பதை இக்குறட்பாவும் தெற்றெனக் காட்டி நிற்கின்றது.

5. பிறவிப் பெருங்கடல்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும்; மற்றவர் கடக்க முடியாது.

இங்கு வள்ளுவரால் சுட்டப்படும் 'பிறவிப்பெருங் கடல்' நாம் முன்பு பார்த்ததுபோல தலைமுறைக் கொள்கையினர், பிறவிச் சுழற்சிக் கொள்கையினர் ஆகிய இரு சாராருக்குமே பொருந்துகிறது.

இரு கொள்கையினர்க்கும் பொருந்தக் கூடிய தொடராகிய 'பிறவிப் பெருங்கடல்' வைக்கப்பட் டுள்ள இடத்தையும் அது குறிக்கும் பொருளையும் நோக்குவோம்.

இத்தொடர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் இறுதிச் செய்யுளினுள் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு உரை கூறும் உரையாசிரியர்கள், தங்க ளுடைய பிறவிச் சுழச்சிக் கொள்கைக்கு ஏற்பப் பொருளுரைத்துள்ளனர். இது பொருந்துமா?

தலை முறைக் கொள்கை, பிறவிச் சுழற்சிக் கொள்கை இவற்றுள் கடவுளை வாழ்த்தும் கொள்கை எது? தலைமுறைக் கொள்கையேயன்றோ? பிறவிச்

சுழற்சிக் கொள்கைக்கும் கடவுளுக்கும் தொடர்பு ஏது ?

கலப்புக் கொள்கை

திருவள்ளுவர் சங்ககாலத்தைச் சேர்ந்தவர் என அறிஞர் பெருமக்கள் முடிவு கட்டுகின்றனர். அப்படியானால் கடவுளைப் பற்றிய சங்ககாலக் கொள்கை என்ன? சங்க காலத்தில் இங்கிருந்த சமயங்களின் கொள்கைகள் யாவை? திருவள்ளுவர் வாழ்த்தும் ஓரே கடவுள் வணக்கம் சங்ககாலச் செய்யுட்களுள் நாம் காண முடிகிறதா ? திருவள்ளுவர் கூறும் சித்தாந்தங்களைச் சங்ககால இலக்கியங்கள் எவையெவை கூறுகின்றன ?

> "திருக்குறளை ஆராயும்போது வள்ளுவரின் சிந்தனை சங்கப் புலவர்களுடைய சிந்தனையினும் வேறுபாடுடையதாக, அதனினும் பரந்தவொன்றாகத் தோன்றுகிறது"
>
> "சங்க இலக்கியத்திற்கும் வேறாக ஒரு புதிய இலக்கிய நெறியினையே வள்ளுவர் பின்பற்றிச் செல்கிறார் எனத் தோன்றுகிறது."

—ப. அருணாசலம், எம்.ஏ., எம்.லிட்.
'குறளின் செய்தி' (முன்னுரை)

நம் தமிழகத்தின் மிகப் பழம் இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம்,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லைகுறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

—பொருள். அகத்திணை. 5

என ஒவ்வொரு நிலத்திற்கு ஒவ்வொரு தெய்வத்தைக் கூறுகிறது. மேலும் சங்க நூல்களை நாம் ஆராயுங்கால் பல சிறு தெய்வ வணக்கத்தைக் காணுகிறோம்.

> "முதலாவது, முற்கூறிய சிறு தெய்வ வணக்கங்களே தமிழர்க்கிருந்தன. பின்பு அவற்றிலிருந்து பெருந் தெய்வ வணக்கமாகிய மதம் தோற்றுவிக்கபபட்டது."
>
> —தேவநேயப்பாவாணர்,
> 'ஒப்பியன் மொழிநூல்' பக். 243

> "வழிபடு தெய்வம்
> நிற்புறங் காப்ப
>
> என்று தொல்காப்பியம் கூறுவது இங்கே வழி வழியாக ஒரு குலத்தினர் வழிபட்டு வரும் தெய்வத்தைக் குறிக்கிறது. அக் காலத்தில் பல தெய்வங்கள் பல்வேறு பெயர்களுடன் வணங்கப்பட்டு வந்தமை இதனால் பெறப்படு படுகிறது."
>
> —எம். ராதாகிருஷ்ண பிள்ளை பி.ஏ.பி.எல்.
> 'குறளின் பெருமை' பக். 100

சமணமும் பௌத்தமும் கடவுள் கருத்தை ஏற்றுக்கொள்ளாத, பிறவிச் சுழற்சிக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்ட சமயங்களாகும்.

> "பெரும்பாலான இந்தியத் தத்துவ மரபுகள் உலகம் என்பது ஒரு காலத்தில் ஒருவரால் படைக்கப்பட்டது என்னும் கருத்தை ஒப்புக்கொள்ள மறுக்கின்றன. வேத மரபில் பூர்வ மீமாம்சம் சாங்கியம் யோகம் என்கிற வழிமுறைகளும், வேத மறுப்பு மரபில்) பௌத்தம் சைனம் என்ற வழிமுறைகளும்

படைப்பு என்கிற கொள்கையை வெளிப்படை யாகவே மறுக்கின்றன.''

''இவற்றையெல்லாம் பார்க்க, எல்லா இந்தியத் தத்துவ மரபுகளும் புவனமும், உயிர்ப் பொருள்களும் எவராலும் படைக்கப்பட்டன அல்ல என்றும், அதேபோல் அவற்றை எவரும் அழிக்க முடியாது என்றும், அவை என்றும் ஒரே நிலையாய் இருந்து வருவன என்றும் கருதுவதாகவே நமக்குத் தெரிகின்றன.''

—பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினார்,
'திருக்குறள் வழங்கும் செய்தி' பக். 68-69

இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களுள், ஒரே கடவுள் வணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த இருபதாம் நூற்றாண்டிலும், யாவரும் வரவேற்கக் கூடிய அறத்தைத் தெளிவாகக் கூறும் முதல் நூலாகவும் முழு நூலாகவும் விளங்கு வது திருக்குறள் ஒன்றேயாகும்.

''தமிழிலுள்ள நீதி நூல்கள் எல்லாவற் றையும் ஒன்று சேர்த்து ஒருதட்டில் வைத்து, மற்றொரு தட்டில் திருக்குறளையும் வைத்தால் இரண்டாவது தட்டே தாழ்ந்திருக்கும்.''

''செங்கதிர்ச் செல்வனிடமிருந்து ஒளி பெற்றுத் திகழும் திங்களைப்போல— நந்தா விளக்கின் சுடரால் ஏற்றப்பட்டு விளங்கும் சிறு விளக்குகளைப்போலத் திருவள்ளுவரிட மிருந்து வெளிப்படும் கருத்தொளியால் உள் ளொளி பெற்றுச் சிறக்கும் புலவர்கள் பலர் உள்ளனர்.''

—புலவர் மு. வை. அரவிந்தன், எம்.ஓ.எல்.
'திருக்குறளும் சங்க இலக்கியமும்' பக். 10-11

"தமிழ்ப் புலவர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நூல்களில் திருக்குறளே முதன்மை வாய்ந்ததென்பதில் ஐயம் இல்லை."

—டாக்டர் உ.வே. சாமிநாதையர்,
'திருவள்ளுவரும் திருக்குறளும்' பக். 12 (1936)

தமிழகத்தில் சமண பௌத்த சமயங்கள் சிறப்பாயிருந்த காலத்தில் அச் சமயக் கருத்தான, பிறவிச் சுழற்சிக் கொள்கை தமிழகத்தில் பரவியது. தமிழகத்தில் இருந்த பல தெய்வ வணக்கக் கோட்பாட்டுடன், வைதீகக் கொள்கைகளும் கலந்தன. கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் வைதீகக் கொள்கைகளால் மேற்கொள்ளப்பட்டு ஒடுக்கப்பட்டன. ஆயினும் சமண பௌத்தக் கொள்கையின், பிறவிச் சுழற்சிக் கருத்து மக்கள் மனத்தில் ஆழப் பதிந்திருந்தமையாலும், மேற்கொள்ளப்பட்ட சிறுபான்மையினரான சமண பௌத்தக் கொள்கையுடையோர், ஆரியக் கொள்கையுடன் இணைக்கப்பட்டமையாலும் இப் பிறவிச் சுழற்சிக் கருத்து பல தெய்வ வணக்கக் கோட்பாட்டில் இணைக்கப்பட்டது. ஆகவே பிற்காலத்தில் வந்தவர்களுக்கு இவ்விரண்டு கொள்கைகளையும் பிரித்தறிய முடியாநிலை ஏற்பட்டதெனலாம். இக் கலப்புக்கொள்கை உருவானமை பற்றி மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் கருத்து :—

"சமயப் போர் கடுமையாக நடந்த காலத்திலும், சமண சமயம் குன்றிய காலத்திலும் சமணரிற் பெரும்பாலோர் 'இந்து' மதத்தில் சேர்ந்து சைவராகவும், வைணவராகவும் மதம் மாறிவிட்டனர். இவ்வாறு இந்து மதத்தில் புகுந்த சமணர் வாளா வெறுங்கையோடு வந்துவிடவில்லை. சைவ வைணவராக மாறிய

சமணர் தமது சமண சமய ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் இந்து மதத்தில் புகுத்தி விட்டனர். ஏற்கெனவே, திராவிட வைதீக மதங்களின் கொள்கைகள் கலக்கப் பெற்றுப் புதிய உருவடைந்த இந்து மதத்தில், இன்னும் புதிதாகச் சமணக் கொள்கைகளும் கலக்கத் தொடங்கின. இதனோடு நின்றபாடில்லை. இக் காலத்திலேயே தமிழ்நாட்டிலிருந்த பௌத்த மதத்தினரும் இந்து மதத்தோடு சேரத் தொடங்கி அவர்களும் தமது சமயக் கொள்கை களிற் சிலவற்றைப் புதிய இந்து சமயத்துடன் சேர்த்துவிட்டார்கள். இவ்வாறு, இந்து மதத் தில் புதிய புதிய கொள்கைகள் கலக்கப்பெற்று இந்து மதம் பலவாறு மாறுதல் அடைந்து கொண்டிருந்தது.''

—மயிலை சீனி. வேங்கடசாமி,
'சமணமும் பௌத்தமும்' பக். 75, 76

'' திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர் சில நூற்றாண்டுகள் வரை தமிழர் தத்துவங் களுக்குக் குந்தகம் ஏதும் விளையவில்லை. ஆனால் தேவார காலத்தில் ஞானசம்பந்தர் என்கிற இந்து சமயத் தலைவர் காபாலிகம் என்கிற இகன்மை வாய்ந்த மதத்தை (Militant religion)ப் புகுத்திக் கொலை மறுப்புப் பண் பாட்டை சிதைக்க முற்பட்டார்......கொல்லா மைச் சமயத்தைச் சேர்ந்த துறவிகள் பலரை அரசனின் உதவிகொண்டு அவர் கழுவேற்றி னார்.........தமிழர்களின் பழஞ்சமயம் தடந் தெரியாமல் அழிக்கப்பட்டுச் சாதி முறையைக் கொண்ட ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்டது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட

இம் மாறுதல் இன்றுவரை தமிழர் சமுதாயத்தில் நின்று நிலவி வருகிறது."

—'திருக்குறள் வழங்கும் செய்தி' பக். 112

"நகரத்தார்கள் சைவர்களாக மாறுவதற்கு முன்பு, சமண மதத்திலும், புத்த மதத்திலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்திருக்கின்றார்கள். சாத்தன், சாத்தப்பன், சாத்தம்மை, மாசாத்துவான், மாசாத்தியார் ஆகிய பெயர்களெல்லாம் சமண மரபை ஒட்டியவையே யாகும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிடையேதான் இந்தப் பெயர்கள் அதிகம் உண்டு."

—கவிஞர் கண்ணதாசன் கருத்துரை,
'நகரத்தார் வரலாறு' பக். 25,26 (1970)

"ஒருகாலம் நாடார்கள் யாவரும் புத்த மதத்தைத் தழுவியிருந்ததாகக் கூறுவாருமுண்டு."

மறைத்திரு வி. டி. சகாயம் எம். ஏ.
'இந்தியாவும் கிறிஸ்தவமும்' பக். 28 (1956)

ஆகவே தமிழகத்து 'இந்து' சமயம், 1. திராவிட, 2. வைதீக, 3. சமண, 4. பௌத்த மதங்கள் கலந்த ஒரு கூட்டு சமயமேயாகும்.

ஆகவே திருக்குறள் தோன்றி ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், அதற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் திருவள்ளுவரின் உள்ளப் பாங்கைத் தெளிவாகக் கண்டு உரை எழுதினார்கள் எனக் கூறமுடியாது. உரையாசிரியர்கள் தங்கள் காலத்தில் நிலவிய கலப்பு சமயக் கொள்கையின் அடிப்படையில் உரை எழுதியிருப்பதே இயல்பு.

அவர்கள் முயன்றாலுங்கூட ஒரே கடவுள் வணக்கத்தையுடைய தலைமுறைக் கொள்கையைத் தனித்துப் பிரித்து அறிந்துகொள்ள முடியா நிலையில் இருந்திருப்பர் என்றே எண்ணவேண்டியுள்ளது.

> "ஒரு நூலின் ஆசிரியர் காலத்திலேயே அதற்கு உரை அமைந்திருப்பின் இத்தகைய மாறுபாடுகள் உண்டாகக் காரணமில்லை. பிற்காலத்தில் வந்த உரையாசிரியர்கள், நூலாசிரியருடைய கொள்கையை முற்றும் உணர்தல் இயலாது. ஆதலின் அவர்களுடைய உரைகளிற் சில மாறுபாடுகள் இருத்தல் கூடும்."
>
> —மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
> டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்,
> 'திருவள்ளுவரும் திருக்குறளும்' பக்-7 (1936)

> "பரிமேலழகர் காலம் நம் இருபதாம் நூற்றாண்டைவிட இடைக்காலப் போலிச் சமயக் கருத்துக்கள் பரவிய காலம்.
>
> —மணிவிளக்கவுரை IV பக். 442

ஆகவே அவர்களின் உரைகள் திராவிட, வைதீக, சமண, பௌத்த, இந்துமத அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

ஆனால் சங்ககால நூலெனக் கருதப்படும் திருக்குறளில், நாம் தெளிவாகக் கடவுள் கருத்தை அடிப்படையாகக் கொண்ட, பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு மாறான மேற்கூறிய தலைமுறைக் கொள்கையையே காண முடிகிறது. அதில் எவ்விதக் குழப்பத்திற்கும் இடமில்லை. குழப்பமெல்லாம் பிற்காலத்தில் திருக்குறளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களின் உள்ளத்திலேதான். அவர்கள் உரையிலேதான். இனி குறட்பாவுக்கு வருவோம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார். 10

இக் குறட்பா கடவுள் வாழ்த்து அதிகாரத்தினுள் வைக்கப்பட்டுள்ளமையாலும், குறட்பாவினுள் 'இறைவனடி சேராதார் நீந்தார்' என, கடவுட் கொள்கையே வற்புறுத்தப்பட்டுள்ளமையாலும் இது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு உட்பட்டதன்று என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இங்கு இன்னொரு ஐயம் தோன்ற ஏதுவுண்டு. தலைமுறைக் கொள்கையின்படி ஒருவனைத் தீயுலகில் சேர்ப்பவை,

1. இவன் முன்னோர் செய்த தீவினையாகிய பிறவி வினை.

2. இவன் செய்த வினையாகிய தன் வினை.

ஆகிய இரண்டு வினைகளுமாகும். நாம் காணும் 'பிறவிப் பெருங்கடல்' பிறவியில் இவனைத் தொடர்ந்து வரும் பிறவிவினையைக் குறிக்குமானால் இவன் செய்த தீவினையாகிய 'தன்வினையை' வள்ளுவர் கூறியிருப்பது எங்கே? இவ்விரண்டு வினைகளையும் நன்கு வேற்றுமை தோன்றும்படியாக வள்ளுவர் கூறியுள்ளாரா? தலைமுறைக் கொள்கையின் இவ் வேறுபட்ட இவ்விருவினைகளையும் வள்ளுவர் கூறியிருப்பாரானால், அவைகளை உரையாசிரியர்கள் விளக்கமுடியாமல் திணறியிருக்க வேண்டுமே? அவ்வாறு அவர்கள் திகைப்படைந்த இடம் எது? என்ற வினாக்கள் எழுகின்றன. உரையாசிரியர்களின் திறமை இங்குதான் நன்கு வெளிப்பட்டுத் தோன்றுகிறது.

வள்ளுவர் இவ்விரு தீவினைகளையும் தனித் தனியே கூறுகிறார். தனித்தனியாகக் கூறுமிடங்

களில் உரையாசிரியர்கள் அவற்றைத் தனித்தனியாக மடைமாற்றம் செய்துவிடுகின்றனர்.

பிறவியில் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் ஆதிப்பழியாம் முன்னோர் செய்த வினையாகிய பிறவி வினையை, பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கேற்ப முற்பிறவியில் செய்த தீவினையாகிய, பிறவியில் தொடர்ந்து வரும் முற்பிறவித் தீவினை எனக் கூறுகின்றனர்.

இவன் தன் காலத்தில் செய்யும் தீவினையாகிய தன்வினையை, பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கேற்ப அடுத்த பிறவியில் தன்னை நடத்தப்போகும் தீவினை எனப் பொருள் கூறிவிடுகின்றனர்.

ஆகவே வள்ளுவர் கூறும் சொற்களுக்கு பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கேற்பத் திறமையாகப் பொருள் காட்டப்பட்டுவிடுகின்றது.

பொய்யுடை யொருவன் சொல்வன்மை யினால்
பொய்யும் மெய்போலாமே மெய்போலாமே.

என்ற மொழிக்கேற்ப, பொய் மெய்போலாகிவிடுகிறது. ஆனால் மெய் போலத்தான் ஆகுமேயொழிய மெய்யேயாகிவிடாது. ஆகவே கூர்ந்து நோக்குவோர் மெய்போல இருப்பதையும் மெய்யையும் கண்டுகொள்ள முடியும்.

இவ்வாறு நாம் பிரித்து அறியக்கூடிய இடமே கடவுள் வாழ்த்து அதிகாரமாகும். பிறவிச் சுழற்சிக் கொள்கையுடையோர் எவ்வளவு திறமையாகப் பொருள் கூறினாலும், பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கும், அதற்கு நேர் எதிர்மாறான கடவுள் கொள்கையையுடைய தலைமுறைக் கொள்கைக்கும் உள்ள அடிப்படை வேற்றுமை, வேற்றுமையுடனேயே காணப்படும்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையில் கடவுள் வாழ்த்துக்கு இடமேது? பிற்காலப் பலசமயக் கலப்புக் கொள்கைக்கேற்ப, பிற்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள், கடவுட் கொள்கையையும் பிறவிச் சுழற்சிக் கொள்கையையும் இணைத்துக் காட்டிய போதிலும் அவர்களுக்கும் இடர்ப்பாட்டை ஏற்படுத்திய இடம், திருக்குறளின் கடவுள் வாழ்த்தில் உண்டு. பிற்காலக் கலப்புக் கொள்கையின் கடவுள் வாழ்த்திற்கும், முற்காலக் கலப்பற்ற தனி முறைக் கொள்கையின் கடவுள் வாழ்த்திற்குமுள்ள வேற்றுமைமையே இது சுட்டிக்காட்டிவிடுகிறது.

இவ்வாறு சுட்டிக்காட்டும் கடவுள் வாழ்த்துக் குறட்பாக்களே,

1. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

2. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

3. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

மேலே நாம் காணும் மூன்று குறட்பாக்களுள் இறுதிக் குறட்பாவுக்கு எளிதாகத் தங்கள் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கேற்பப் பொருள் கூறிய உரையாசிரியர்கள், மற்ற இரு குறட்பாக்களுக்கும் தங்கள் கொள்கைக்கேற்பப் பொருள் கூற முடியாது, அல்லல் பட்டிருப்பதை அவர்கள் உரைகளிலேயே நாம் காணுகிறோம்.

இக் கடவுள் வாழ்த்துக் குறட்பாக்களுள் வள்ளுவர் இரண்டு கடல்களைக் கூறியுள்ளார்.

1. பிறவாழி
2. பிறவிப் பெருங்கடல்.

ஒன்றை ஆழமுடையது என்னும் பொருளில் 'ஆழி' என்றார்.

'ஆழி' என்னும் சொல் நூலில் இருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த குறட்பா.

> ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
> ஆழி எனப்படு வார்.

ஆனால் 'கடல்' என்னும் சொல்லோ 10, 17, 103, 496, 1137, 1164, 1166, 1175, 1200, ஆகிய ஒன்பது இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆழி - ஆழமுடையது கடல் ஆழமுடன் பரந்து பட்டது என்னும் பொருளுடையது.

ஆழி. கடல், என்னும் இரண்டும் மேலெழுந்த வாரியாக ஒரே பொருளைக் குறித்தாலும், வள்ளுவர் இவற்றைக் கூறும் முறையில் வேற்றுமையுண்டு எனவே எண்ண வேண்டியுள்ளது.

எவ்வளவு ஆழமுடைய நீர் நிலையாயினும், அதைப் படகு கொண்டு கடக்கும் ஒருவனுக்கு, அதன் பரப்பளவே முக்கியமானது. அவன் கடக்க வேண்டிய தூரம் பரப்பளவிலேயே உள்ளது.

ஆழத்தில் மூழ்கி முத்தெடுக்கும் ஒருவனுக்குப் பரப்பைப் பற்றிக் கவலை இல்லை. அவனுக்கு ஆழமே முக்கியத் தொடர்புடையது

ஆழி, கடல் என வள்ளுவர் குறிக்கும் இரு இடங்களிலும் பிறவாழி நீந்தல், எனவும் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' எனவும் நீந்தவேண்டிய பரப்பளவையே முக்கியப்படுத்திக் கூறியுள்ளார்.

மேலும் 'ஆழி' என அடைமொழியின்றிக் கூறியவர், அடுத்ததைக் கூறும்பொழுது 'பெருங் கடல்' என அடைமொழியிட்டுக் கூறுகிறார்.

ஆகவே இரண்டிடத்தும் அவர் நீந்தவேண்டிய பெருநீர்பரப்பை உவமையில் கொண்டாலும், அவற்றிகிடையே வேற்றுமையுண்டென்பதையும் நுட்பமாக விளக்குகிருர்.

இவ்வேற்றுமையை விளக்க இரண்டு குறட்பாக்களிலும் அவர் பெய்துள்ள முடிவுச்சொற்கள் முக்கியமானவை.

> 'பிறவாழி நீந்தல் அரிது' எனக் கூறியவர் இறுதிக் குறட்பாவில் 'நீந்தார்' எனத் திட்டவட்டமாக முடித்து விடுகிருர்.
>
> 'அரிது' எனக் கூறுங்கால் மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டால் 'எளிது' எனப்பொருள் கொள்ள இடமளிக்கிறது. ஆனல் 'நீந்தார்' என முடித்த பின்னர், எவ்வளவு முயற்சித்தாலும் யாதும் பயனில்லை என்ற முடிவு தெளிவாகக் குறிக்கப்படுகிறது.

ஆகவே, 1. பரப்பு :—ஆழி —கடல்
2. சிறப்பு :—ஆழி —பெருங்கடல்
3. முயற்சி:—அரிது—நீந்தார்

ஆகிய மூன்று நிலைகளில் பிற ஆழிக்கும் பிறவிப் பெருங்கடலுக்கும் வேற்றுமையுண்டென்பது தெளிவாகிறது.

மேலே நாம் காணும் குறிப்புப்படி வள்ளுவர் குறிக்கும் 'பிறவாழி' வேறு; 'பிறவிப்பெருங்கடல்' வேறு என்ருகிறது. இவை இரண்டையும் கடப்பதற்கு அறவாழி அந்தணன், இறைவன் ஆக விளங்கும் கடவுளின் தாளாகிய அடி சேர வேண்டும் என்பது வள்ளுவர் கொள்கை.

இங்கே வள்ளுவர் குறிக்கும் பிற ஆழி, பிறவிப் பெருங்கடல் இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? உரையாசிரியர்களை நோக்குவோம்.

	பிறவாழி	பிறவிப் பெருங்கடல்
பரிமேலழகர் :	பிறவாகிய கடல்கள். பொருளுமின்பமும் 'பிற' வெனப் பட்டன.	— பிறவியாகிய பெரிய கடல்
மணக்குடவர் :	பிறவாழி, காமமும் பொருளும் பற்றி வரும் அவலம்.	— பிறவியாகிய பெரிய கடல்
பரிதியார் :	பாவக்கடல்	— பிறவியாகிய பெரிய பௌவம்
காலிங்கர் :	பிறவிப்பௌவம்	— பிறவியாகிய பெரிய பௌவம்.
தண்டபாணி :	பொருளின்பக் கடல்கள்	— பிறவியாகிய பெரிய கடல்
பழைய உரை :	பிறவிக்கடல்	— பிறவியாகிய கடல்
பாவாணர் :	பிறவாகிய பொருளின்பக் கடல்	— பிறவியாகிய பெரிய கடல்
குழந்தை :	பிறகடல்கள். பிற என்றது பொருளையும் இன்பத்தையும்	— பிறவியாகிய பெரிய கடல் பிறவி-வாழ்க்கை
சாமி சிதம்பரனார் :	பொருளும் இன்பமும் ஆகிய வேறு கடல்கள்	— பிறவியாகிய பெரிய கடல்

டாக்டர்மு.வ :	பொருளும் இன்பமுமாகிய மற்றக்கடல்கள்	— பிறவியாகிய பெரிய கடல்
எல்லிஸ்துரை:	பாவக் கடல்	
கவிராஜ பண்டிதர்	பிறப்பெனும் கடல்	
பன்மொழிப் புலவர்	பொருள் வாழ்வு இன்ப வாழ்வு என்ற மற்றிரு பெருங்கடல்	-பிறப்புத் தலைமுறைகளை அலைகளாகக் கொண்ட இனவாழ்வு என்னும் எல்லையற்ற கடல்

மேலே நாம் காணும் உரையாசிரியர் கருத்துக்களில் 'பிறவிப் பெருங்கடல்' என்னும் தொடருக்கு அவர்களிடையே வேற்றுமை இல்லை. பிறவிச் சுழற்சிக் கொள்கையை ஏற்காத தற்கால உரையாசிரியர்களான புலவர் குழந்தை அவர்களும் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் அவர்களும் ஆகிய இருவர் மட்டுமே, மற்றவர்களுடைய உரைகளினின்று மாறுபட்டுக் கூறுகின்றனர். இவ்விருவர் பொருளுள்ளும் புலவர். குழந்தை அவர்களின் பொருளைவிடப், பன்மொழிபுலவர் அவர்களின் பொருளே சிறப்புடையதெனலாம். புலவர் குழந்தை அவர்களின் கொள்கைப்படி பிறவியை வாழ்க்கை எனக் கொண்டால், பிறவிப் பெருங்கடல் என்பதிலுள்ள 'பெரும்' என்பது தனி வாழ்க்கைக்குப் பொருந்துமா ?

> நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமையுடைத்து இவ்வுலகு.

எனக் கூறிய வள்ளுவர் நிலையாமையாகிய வாழ்க்கையைப் பெருங்கடல் எனக் கூறினர் என்பது பொருந்துமா ?

அடுத்து பன்மொழிப்புலவர் அவர்கள் 'பிறவிப் பெருங்கடல்' என்பதற்கு 'பிறப்புத் தலை முறையாகிய எல்லையற்ற கடல்' எனப் பொருள் கூறியிருப்பது மற்ற உரையாசிரியர்கள் அத்தனை பேரும் காணுத புதுக் கோணமாகும். இக்கோணத் தில் பொருள் கொடுக்கும் முதல உரையாசிரியர் இவரே எனலாம்.

'பிறவிப் பெருங்கடல்' என்ற தொடருக்கு இடைக்காலக் கலப்புக் கொள்கையின்படி பிறவிச் சுழற்சியாகிய பெருங்கடல், — தலைமுறையாகிய பெருங்கடல் என எந்த வகையில் பொருள் கொண் டாலும் அது பொருந்துவதாகவே அமைகிறது. ஆனல் தெளிவான வேற்றுமையையுடைய திரு வள்ளுவர் கொள்கைப்படி தலைமுறைக் கொள்கை யில் பொருள் கூறும் பன்மொழிப்புலவர் அவர்களின் உரை மட்டுமே பொருந்துவது என்பது 'இறைவன் அடிசேர்தல்' கூறப்படுவதால் உறுதிப்படும். பண்டைப் பிறவிச் சுழற்சிக் கொள்கையாம் சமண பௌத்தக்கொள்கையில் இறைவன் ஏது ? அவனடி சேர்தல் எங்கே ?

அடுத்த தொடரைப் பார்ப்போம். பிறஆழி.

இதற்கு உரையாசிரியர்கள் மூவகையாகப் பிரிந்து நின்று உரை கூறுகின்றனர்.

பிறஆழி என்பதை பிறவு + ஆழி எனக் கொண்டு, இதுவும் பிறவிக்கடலே எனப் பொருள் கூறியவர்கள், காலிங்கர், பழைய உரைகாரர், கவி ராஜ பண்டிதர் ஆகிய மூவருமாகும்.

இது பொருந்துமா?

அறக்கடலாக விளங்கும் இறைவன் அடிசேரா தார், பிறவிக் கடலை நீந்துதல் அரிது எனக் கூறிய வர், மீண்டும், இறைவன் பாதத்தைச் சேராத வர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்தமாட்டார்கள் என, கூறிய கருத்தையே மீண்டும் கூறுவாரா வள்ளுவர்? நீந்தார் எனத் திட்டமாகக் கூறியவர் அரிது, என மயக்கத்திற்கிடமாகக் கூறுவாரா?

பயனிலசொல் பாராட்டுவானை மகன் எனல்
மக்கட் பதடி யெனல்.

எனக் கூறியவர், கூறிய கருத்தையே மீண்டும் கூறு கிறார் என்பது பொருந்தாது.

அடுத்து உரையாசிரியர்களுள், பரிதியார், எல்லிஸ் ஆகிய இருவரைத் தவிர, மீதி அத்தனை பேரும் கூறும் பொருளை நோக்குவோம்.

'அறவாழி அந்தணன்' என இறைவன் குறிக் கப்படுகின்றமையால், அறக்கடலுக்கு மாறான பிறஆழி, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்ற னுள் மீதியாயிருக்கும் பொருள், இன்பம் ஆகிய ஆழிதானே என எண்ணி 'பிறஆழி' என்பதற்கு, பொருள், இன்பம் ஆகிய கடல்கள் எனப் பொருள் கொண்டனர்.

இது பொருந்துமா?

அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றனுள் அறவாழியாக, இறைவன் கூறப்படுவதால் மீதி பொருள் இன்பம் ஆகிய இரண்டும் பிறவாழி என உரையாசிரியர்களால் எண்ணப்பட்டது.

பாயிரத்துடன் அறம் பொருள் இன்பம் என முப்பால் பிரிவை வைத்தவர் திருவள்ளுவர். ஆனால்

உறுதிப் பொருள்கள் எனக் கூறப்படுபவை அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்குமாகும்.

வீட்டுப்பால் திருக்குறளிலும் உண்டு. அவ் வீட்டுப்பாலே பாயிரம் என எண்ணுகிறவர்களும் உண்டு.

> " அதே சமயம் பாயிரமே திருக்குறளோடு நுதலிய பொருளனைத்தையும் ஒரே முழு மொத்தமாகத் தொகுத்துக் கூறும் முப்பா லேட்டின் ஒரு சிறு மணிப்பதிப்பாகவும், நாலாவது பாலாகிய வீட்டுப்பால் கூறும் பகுதி யாகவும், ஏட்டின் அழகுக் கவர்ச்சி மிக்க முன்னுரை முகப்புரை அடங்கிய நூன்முக மாகவும் திகழ்கின்றது."

மணிவிளக்கவுரை I பக். 146

திருக்குறளைப் பாராட்டி எழுந்த நூலாகிய திருவள்ளுவ மாலையில், திருவள்ளுவர் வீட்டுப்பால் உட்பட நான்கு பாலையும் கூறியுள்ளார் என்ற செய்தியைப் பல பாடல்கள் நமக்கு அறிவுறுத்து கின்றன.

" அறம் பொருள் இன்பம்வீடென்னும் அந்நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை." —8

" பெறலரிய நாலும் மொழிந்த பெருநாவலரே." —22

" இன்பம் பொருள் அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்." —33

" அறம்முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளிய." —38

" தருமம் முதல் நான்கும் சாலும்." —44

" அறன் அறிந்தேம் ஆன்றபொருள் அறிந்தேம்இன்பின்
திறன் அறிந்தேம் வீடுதெளிந்தேம்." —50

மேலே நாம் காணும் நரிவெரூஉத் தலையார் பாடிய 33 ஆம் பாடலில், பாயிரமே வீடு எனச் சுட்டியிருப்பதும் நோக்கத்தக்கது. சில பழைய ஏடுகளில் பாயிரம் 'வீட்டு நெறிப்பால்' எனக் குறிக்கப்பட்டிருந்தமையும், அவை விடப்பட்டமையும் மகாவித்வான் தண்டபாணி பிள்ளை அவர்களின் குறிப்பால் விளங்குகிறது.

> "கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களின் முடிவில் 'வீட்டுநெறிப்பால் முற்றும்' என்ற தொடர், ஏடுகளில் காணப்படுவதால், அந்த நான்கு அதிகாரங்களையும் வீட்டு நெறிப்பால் எனக் கருதினரோ என்று எண்ண இடந்தருகிறது. ஆசிரியர் குறிக்கோள் அறியக் கூடாமையின் இக் குறிப்பு, எமது உரைவளப் பதிப்பில் விடப்பட்டது."
>
> —திருக்குறள் அழகும் அமைப்பும் பக். 177 (1969)

எனவே திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் கூறியுள்ளார் என்பது உறுதி எனலாம். இவ்வுறுதிப் பொருள் நான்கனுள் 'அறவாழி' என இறைவன் அழைக்கப்பட்டதாக உரையாசிரியர்கள் கருதினால் பிற ஆழிகளாக பொருள் ஆழி, இன்ப ஆழி, வீட்டு ஆழி ஆகிய மூன்று ஆழிகளையும் வள்ளுவர் கூறியிருக்கவேண்டும்.

'பிற ஆழி நீந்தலரிது' என்ற தொடருக்கு பொருள் இன்பம் வீடு ஆகிய மூன்று ஆழிகளையும் நீந்தல் அரிது என உரை கூறினால், அது எவ்வாறு பொருந்தும்? வீட்டையும் ஆழியாகக் கொண்டால் அதைக் கடந்து செல்லுவது எங்கே? அறவாழி என்பது அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருட்களுள் அறத்தை மட்டுமே குறிக்குமெனப்

பொருள் கொள்ள முடியுமா? அப்படியானுல் இறைவன் உறுதிப் பொருள் நான்கிற்கும் தலைவன் இல்லையா? அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருள் நான்கில், முதல்படியான அறமாக, வள்ளுவர் இங்கு குறிக்கும் 'அறவாழி' இருக்க முடியுமா? அறம்-மறம் ஆகிய நேர் நேர் எதிர் பொருள் இரண்டனுள், அறவாழியாக விளங்குபவன் இறைவன்; இறைவனற்ற செயல்கள் மறமாகக் கருதப்படும், என்ற எண்ணத்தில் அறவாழி—அறக்கடல்-இறைவன் எனவும், பிறவாழி-மறக்கடல் அல்லது பாவக் கடல் என்றும் பொருள் கூறினர். அங்கும் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு இடர்ப்பாடு உண்டு.

எவ்வாறு?

பிற ஆழிழிக்குப் பாவக்கடல் எனப் பொருள் கொண்டால் வள்ளுவர் பின்னரும் பிறவிப் பெருங் கடல் எனக் கூறுவதால், பின்னர் சொல்லப்படும் பிறவிப் பெருங்கடலுக்கும், அற ஆழிக்கு மாருண பாவக்கடலுக்கும் உள்ள வேற்றுமை என்ன? மறம் என்பது தனியாகத் தோன்றுவதா? பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி முற்பிறவி வினைதானே இப் பிறவியை நடத்துவது. இப்பிறவி வினை அடுத்த பிறவியை நடத்தும். ஆகவே பிறவிச் சுழற்சிக் கொள்கையில் தனியான மறம் ஒன்றும் இல்லையே?

பாவம் எவ்வாறு பிறவிச் சுழற்சிக் கொள்கைக் குப் பொருந்தும்? இறைவன் பாவத்தை நீக்குகிருர் எனக் குறிப்பிட்டுவிட்டால், அங்கு பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குச் சிறிதும் இடம் இல்லையே? பிறவிச் சுழற்சிக் கொள்கையில் இறைவன் ஏது? பாவம் ஏது? பாவநீக்கம் ஏது?

அடுத்து இருள்சேர் இருவினையை நோக்கு வோம்.

இருள்சேர் இரு வினையும் சேரா இறைவன்
பொருள் சேர்புகழ்புரிந்தார் மாட்டு.

இக்குறட்பாவில் கூறப்படும் இருவினை எவை? பொதுவாக ‘இருவினை’ என்பது நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் குறிக்கும் என்னும் கருத்தே ஓங்கி நிற்கிறது. ஆனால் ‘இருள்சேர் இருவினை’ எனக்கூறப்படும் இப்பகுதிக்கு, நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் பொருளாகக் கூறமுடியுமா?

தீவினை இருளில் சேர்க்கும் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்து. நல்வினையும் இருளில்தான் சேர்க்கும் என்ற கருத்து எங்ஙனம் பொருந்தும்? ‘இருள்சேர் இருவினை’ என்பதே வள்ளுவர் வாக்கு. இதற்கு இருளில் சேர்க்கும் இரு வினை என்பதே பொருளாகும். இருளில் சேர்க்கும் இருவினை எவைகளாய் இருக்கமுடியும்? இருவினை நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் குறிக்கு மானால் நல்வினை இருளில் சேர்க்குமா? நல்வினையும் இருளில் சேர்க்குமானால், நல்வினை செய்வதா? வேண்டாமா? நல்வினையே செய்யவேண்டாம் என்பது பொருந்துமா? நல்வினையே செய்யாவிடில், பொதுவாக உரையாசிரியர் கூறும் பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி அதிலிருந்து விடுதலை பெறுவது எவவாறு? உரையாசிரியர்களை நோக்குவோம் :—

இருள்சேர் இருள்வினை :

மகாவித்வான் தண்டபணி பிள்ளை : அறியாமை சேர்ந்த நல்வினை தீவினை இரண்டும்.

பரிமேலழகர் : மயக்கத்தைப் பற்றிவரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும்.

மணக்குடவர் : மயக்கத்தைச் சேர்ந்த நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினையும்.

பரிதியார் : மும்மலவித்தாகிய பாவம்.

காலிங்கர் : தம் அறியாமையாகின்ற இருள் காரணமாக வந்து இயைகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும்.

தாமத்தர் : அஞ்ஞானத்தாலுண்டாகும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும்.

நச்சர் : அஞ்ஞானம் பற்றி எழாநின்ற இரு வினைகளும்.

தருமர் : தம் அறியாமையாகின்ற இருள் காரணமாக வந்து இயைகின்ற நல்வினை தீவினைகள் என்னும் இரண்டு வினையும்.

குழந்தை : அறிவின்மையால் உண்டாகும் பெரிய துன்பங்கள்.

கா. அப்பாத்துரையார் : தன்னல மயக்கம் சேர்ந்த நல்வினை தீவினையாகிய இருவினைகள்.

மயிலை சிவமுத்து : சென்ற பிறப்பில் செய்த வினைகள், இந்தப் பிறப்பில் செய்த தீவினைகள் ஆகிய இரண்டும்.

பால்வண்ணனார் : இருளைத் தருகின்ற நல்வினை தீவினைகள்.

மேலே நாம் காணுகின்றபடி, உரையாசிரியர்களால் புதிதாக ஒரு தொடர் இணைக்கப்படுகின்றது. நல்வினை இருளில் சேர்க்காது என்பதையுணரும் உரையாசிரியர்கள், வள்ளுவர் உள்ளக் கருத்தை உணரக் கூடாமல், அதே நேரத்தில் வள்ளுவர் குறளுக்கும் பொருள் சொல்ல வேண்டிய மயக்க நிலையில், ''மயக்கம் காரணமாக வருகின்ற'' என்ற புதிய தொடரை இணைத்துள்ளனர். நல்வினை எத்தனை வகைப்படும்? உரையாசிரியர்

கொள்ளுகின்றபடி மயக்கம் காரணமாக வருவது நல்வினையாகுமா? மயக்கமில்லாமல் வருகின்ற நல்வினைக்கும் மயக்கம் காரணமாக வருகின்ற நல்வினைக்கும் உள்ள வேற்றுமை யாது? 'நல்வினை' என்னும் சொல் முக்காலத்திலும் நன்மை பயப்பதைத்தானே பொருளாகக் கொண்டது? அச்சொல்லை 'இருள்சேர்' என்பதுடன் இணைக்க முடியுமா? இணைத்தால் அது பொருந்துமா? வள்ளுவரால் இத்துணை அழுத்தமாக வலியுறுத்திக் கூறப்படும் அறக்கருத்துக்களை, இருளில் சேர்க்கும் நல்வினை, இருளில் சேராத நல்வினை எனப் பிரித்துக் கூறமுடியுமா? வள்ளுவர் அவ்வாறுதான் கூறுகிறாரா?

பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி திருக்குறளுக்குப் பொருள் கூறமுடியாது என்பது விளங்குகிறது. ஆகவே அதற்கு எதிர்மாறான கடவுள் கொள்கையின் அடிப்படையில் பொருள் காண்போம்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையின் கலப்பே சிறிதும் இல்லாத, கடவுள் கொள்கையைமட்டுமே அடிப்படையாகக் கொண்டவை உலகில் யூத, கிறித்தவ, இசுலாமிய சமயங்கள் போல்வனவாகும். சங்க காலத்தில் நம் தமிழகத்தில் யூத மதத்தைச் சேர்ந்தவர்கள் வாணிபத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்தமைக்கான வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. கிறித்தவ சமயமும் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே வேறு பெயருடன் இங்கிருந்தமையையும், அது சங்க நூல்களில் பெற்றுள்ள இடத்தையும் 'சான்றோர் யார்?' தெளிவாக விளக்குகிறது. ஆகவே பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முற்றிலும் முரண்பட்ட கடவுள் கொள்கையை கிறித்தவ சமயத்தின் வாயிலாக நோக்குவோம்.

கடவுளால் படைக்கப்பட்டவனே மனிதன். ஆதியில் படைக்கப்பட்ட ஆணும்பெண்ணும் ஆதிப் பெற்றோர். அவர்களுடைய சந்ததியினரே இன்று இவ்வுலகில் வாழும் மக்கள். இவ்வுலகில் வாழும் மனிதர்களின் முன்னோரும் மனிதர்களே; பின்னோ ரும் மனிதர்களாகவே பிறப்பர். மனிதனுக்காகவே மற்றப் படைப்புகளையும் கடவுள் படைத்தார். ஆகவே படைப்புக்களிலெல்லாம் சிறப்புப் பெற்ற வனே மனிதன். மனிதனைத் தவிர மற்ற உயிர்கள் யாவும் அழியக் கூடியவை. ஆனால் இவனோ அழி யாமையை யுடையவன். எவ்வாறெனில் இவனுக்கு மட்டுமே அழிவில்லா ஆன்மா உண்டு. இதை இவன் கடவுளிடமிருந்து பெற்றுள்ளான். ஆதி மனிதனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட சிறப்புக் கள் யாவும் அவனுடைய சந்ததியினருக்கும் உரிமையாகும்படி கடவுள் திட்டம் வகுத்தார்.

எங்ஙனமெனில் அவர்களுக்கு முதன்மையாகத் தந்தது அருள் சக்தியாகும். கடவுளோடு நெருங் கிய நட்புறவை இது அவர்களுக்கு அளித்தது. மேலும் வேறு சில வரங்களையும் அவர்களுக்கு அளித்தார்.

1. தெய்வீகமான அறிவு ஒளி.
2. முறை தவறிய உடல் இச்சையின்மை.
3. சாகாமை (நோய் வருத்தம் சாவு இவை இல்லா இன்ப நிலை)

மேற் கூறிய அருள் சக்தியும், இன்ப நிலையும், ஆதிப் பெற்றோருக்கும், அவர்களின் சந்ததியினருக் கும் உரிமையாக்க வேண்டும் என்பதே அவர் வகுத்த திட்டம்.

கடவுளிடமிருந்து இவ்வளவு நன்மையைப் பெற்ற ஆதிப் பெற்றோர், கடவுளின் விருப்பத்திற்கு மாறாக நடந்து, தீமையை வரவழைத்துக் கொண்டனர். கடவுள் விருப்பத்திற்கு மாறான செயலாகிய வினையை அவர்கள் செய்து பழியைப் பெற்ற காரணத்தால், அவ்வினை அவர்களின் சந்ததியினரையும் தொடர்ந்து வருகிறது. இவ்வினை இறைவனின் அருளுறவையும் வேறு வரங்கள் அனைத்தையும் இழந்த நிலையை ஏற்படுத்தியது. இந்நிலையே ஆதி வினை அல்லது முன்னோர் வினை என அழைக்கப் படுகிறது. இது பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பிறப்பிலேயே தொடர்ந்து வரும் காரணத்தால் பிறவி வினை எனவும் அழைக்கப்படுகிறது.

அவனவன் செய்யும் தீய செயல் தீவினையாகின்றது. இது அவனவன் வினையாதலால் அது தன் வினை எனப்படும். இவ்விரு வினைகளும்.

இருளில் சேர்க்கக் காரணம் என்ன? முன்பு நாம் பார்த்தபடி ஆதிப் பெற்றோர், கடவுளின் கட்டளையை மீறியதால் அருள் நிலையை இழந்து மருள் நிலையில் வீழ்ந்து தெய்வீக அறிவு ஒளியினின்று மாறுபட்டமையே யாகும்.

தீய வினை எப்போதும் தீமையாகிய இருளில் சேர்ப்பதாகவே இருப்பதால், தன் வினையாகிய தீவினையும் இருளில் சேர்க்கிறது.

ஆகவே 1. பிறவியில் தொடர்ந்து வரும் பிறவி வினை.

2. அவனவன் செயலால் ஏற்படும் அறத்திற்கு மாறான மறவினையாகிய தன்வினை.

இவ்விரண்டு வினைகளும் அவனை இன்னா உலக மாகிய இருளில் சேர்க்கின்றன. இவ்விரு வினைக ளும் இடைவிடாது முக்காலத்திலும் செயல்பட்டு வரும் காரணத்தால், 'இருள் சேர் இருவினை' எனப் பெயர்பெற்றன.

கடவுளின் அருள் சக்தியாகிய தெய்வீகமான அறிவு ஒளியை இருவினையின் காரணமாக மனிதர் இழந்ததால் ஒளிக்கு மாறான இருளை, இருட்கடலை யடையும் நிலையை யடைந்தனர். இருட் கடல் களாகிய பிறவாழி, பிறவிப் பெருங்கடல் ஆகிய இரண்டையும் நீந்தும் ஒரே வழி ஐந்தவித்தானாகிய கடவுளை அடைதலே, அவனடிசேராதார் பிறவாழி நீந்தலரிது, பிறவிப் பெருங்கடல் நீந்தார். இரு வினையும் இருளில் சேர்க்கும். கடவுளின் சக்தி யாகிய அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இவ் விருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்.

இவ்விரண்டு வினைகளிலுமிருந்து கடவுள் எவ் வாறு விடுதலையைக் கொடுத்தார் என்பதையும் கிறித்தவம் விளக்குகிறது.

கடவுளின் அருள் ஒளியாகிய இன்பத்திலி ருந்து, மீறுதலாகிய பாவ வினையால் பிரிக்கப்பட்டு, மருளாகிய இருளுக்கு உட்பட்ட மனிதனைத் திரும் பவும் தம்மோடு இணைக்க எண்ணங்கொண்ட கட வுள், இருளிலுள்ள மனிதனைத் தேடித் தாமே மனித உரு எடுத்து வந்தார். மனிதனுடைய மீறுதலாகிய இருளைத் தாம் ஏற்று, மீறுதலுக்கான கழுவாயை ஏற்றார். மனிதனின் இருளாகிய துன்பத்தை மனி

தனுக வந்த அவர் ஏற்றுர். பொறிவாயில் ஐந்த வித்தார். ஆயினும் ஒளியாகிய அவரை இருள் பற்றிக்கொள்ள வில்லை. வெற்றிகொண்டார். அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சான்றுக்கத் தம் ஆற்றலை வெளிக்காட்டி, செயற்கரிய செயலைச் செய்து பிறவிப் பெருங்கடலாகிய இருள் சேர் பிறவி வினையிலிருந்து மக்களுக்கு விடுதலையை ஏற்படுத்தினர். அறவாழி அந்தணனும் அவ்வைந்தவித்தானகிய கடவுள் மக்கள் பிறவாழி யாகிய தன் வினையிலிருந்து நீங்கும்பொருட்டு, பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டியதுடன் 'வான்" மூலமாக ஒழுக்கத்தில் நிலை நிற்கும் ஆற்றலையும் அருளி இருள் சேர் இருவினைகளிலிருந்தும் விடுதலையைக் கொடுக்கிறுர். ஆகவே அவன் நெறி நிற்கும் மருள் நீங்கிய மாசறு காட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும்.

இப்பிறவி வினையிலிருத்து ஒவ்வொருவரும் விடுதலை பெற வேண்டிய இன்றியமையாமையும், அதற்கு வழி இறைவனே என்பதையும் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்திலும் கூறுகிறுர்.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு. —358

உள்ளதாகிய இறைவனை அறிந்து ஆராய்ந்து உள்ளத்தில் ஏற்று உணர்ந்தால் இப்பிறவி வினையைப் பற்றிப் பின்பு நினைக்கவே வேண்டாம்.

> ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
> பேர்த்துள்ள வேண்டாம் பிறப்பு. —357

ஆகவே அறத்திற்கு மாருகிய மறக்கடலாகிய தன் வினை, பிறவிப் பெருங்கடலாகிய பிறவி வினை ஆகிய இருள் சேர் இருவினையிலிருந்தும் விடுதலை

யைக் கொடுப்பவன் இறைவனே. அவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு, இருளில் சேர்க்கும் இவ்விருவினைகளும் சேருவதில்லை.

> இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

இது வரை 'இருள் சேர் இருவினை' என்பதிலுள்ள 'இருவினை' என்பதற்கான விளக்கத்தை நோக்கினோம். பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கும் வள்ளுவர் குறளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது நன்கு விளங்குகிறது. இப்போது அத் தொடரிலுள்ள எஞ்சிய பகுதியாகிய 'இருள்' என்பதன் விளக்கத்தைக் காண்போம்.

6. இருள்

இறைவன் ஒளிமயமானவன் என்பதை எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. இறைவன் ஒளியானல் இருள் யாது?

ஒளி இல்லாமையே இருள். ஒளியில்லாதது இருள். எங்கே ஒளியில்லையோ, அங்கே இருப்பது இருள். அதாவது எங்கே ஒளியுருவாய் விளங்கும் இறைவனுக்கு இடம் இல்லையோ, அங்கே இருப்பது இருள். இறைவனற்ற நிலையில் இருப்பது இருள்.

இறைவன் இவ்வண்டம் முழுமைக்கும் தலைவனுனல் அவன் இல்லாத அவனற்ற நிலையும் உண்டா? உண்டு எனச் சமய இலக்கியங்கள் கூறுகின்றன. அச்சமய இலக்கியங்கள் இருவகையான உலகங்களைப் பற்றிப் பேசுகின்றன. ஒன்று இறைவன் உள்ள ஒளிபொருந்திய உலகம். மற்றது இறைவனுக்கு இடமில்லா இருள் நிறைந்த உலகம். இறைவனுள்ள ஒளிபொருந்திய உலகம், இன்பம் நிறைந்த இனிய உலகம் எனவும், இறைவனற்றது இருள் சேர்ந்த இன்ன உலகம் எனவும் விளக்கப்படுகின்றன.

இவ்விரு உலகங்களையும் குறித்துத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தம் நூலுள் கூறுகின்றுர். அவற்றுள் அவர் கூறும் இருள் சேர்ந்த இன்ன உலகததை முதற்கண் நோக்குவோம்.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

அருளுடையவர்களுக்கு இருள்சேர்ந்த இன்னா உலகம் இல்லை. அப்படியானால் அருள் இல்லாதவர்கள் சேரும் இடமே இருள்சேர்ந்த இன்னா உலகம் என்றாகிறது.

இங்கு வள்ளுவர் சுட்டும் குறிப்பு ஒன்று நோக்கத் தக்கது. இவ்வுலகம் இன்னா உலகம் ஆனமைக்குக் காரணம் காட்டப்படுகிறது. இவ்வுலகம் துன்பம் நிறைந்ததாக விளங்கக் காரணம் இங்கே இருள் சேர்ந்தமையே யாகும். இருள் இங்கிருந்து நீங்கு மானால் துன்பமும் இங்கிருந்து நீங்கிவிடும். இருள் சேர்ந்தமையாலேயே இது இன்னா உலகம் ஆயிற்று. ஆகவே துன்பத்திற்குக் காரணமானது இருள். இருள் முன்னும், துன்பம் பின்னுமாக இடைவெளி யின்றி இணைந்து வருவது. துன்பத்திற்குக் காரண மானது இருள்; துன்பத்தைப் பயப்பது இருள்.

ஒருவன் துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் அவன் இருளிலிருந்து விடுதலை பெறவேண்டும். இருள் நீங்கவேண்டுமானால் அங்கே ஒளிவரவேண்டும். ஒருவனுக்குள் இருக்கும் இருள் நீங்கவேண்டுமானால் அவனுக்குள் ஒளி வரவேண்டும். ஒருவன் ஒளியைப் பெறும்பொழுது அவனுக்குள் உள்ள இருளாகிய மருள் நீங்குகிறது. மருள் நீங்கவே அவன் காட்சி சிறப்புப் பெறுகிறது. இதுவரை அவன் காணமுடியாதிருந்த புதிய உண்மைகள் அவனுக்குப் புலப்படுகின்றன. அவனுடைய குருட்டுத் தன்மை நீங்கி உள்ளதை உள்ளபடியே பார்க்கும் ஆற்றல் பெறுகிறான். அவனுடைய காட்சி குற்றமற்ற மாசறு காட்சியாகிறது.

இருளுக்குள் அவன் இருந்தபோது, அவனுக்குப் பார்க்கும் ஆற்றல் இருந்தும், பார்க்கக்கூடிய

சிறந்த பொருட்கள் அவனுக்கு முன் இருந்த போதி லும், அப்பொருட்களை அவன் பார்க்கமுடியாதபடி இருள் அவனை மூடியிருந்தது. ஆகவே அவன் கண்ணிருந்தும் குருடனாயிருந்தான். இருள் நீங்கிய பொழுதோ அவன் மாசறு காட்சியுடையவனானான். ஒரே மனிதன் அவனிருக்கும் நிலைக்கேற்ப மாறுத லடைகிறான் என்பதைக் காணுகிறோம். இருளுக் குள் குருடன், ஒளியில் மாசறு காட்சியன். இருளுக் குள் அவனுக்குத் துன்பம்; ஒளியில் அவனுக்கு இன்பம். அவ்வாறே கடவுளாகிய ஒளியைப் பெற்ற மாசறு காட்சி நிலையும், ஒளியைப் பெறாது இருளில் இருக்கும் இன்னாநிலையும் இருக்கின்றன.

கடவுளுண்மை — ஒளி — இன்பம்

கடவுளின்மை — இருள் — துன்பம்.

இவ்விரண்டு நிலைகளையும் திருவள்ளுவர் தம் நூலுள் விளக்குங்கால்:—

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352

எனக் குறிப்பிடுகின்றார். ஆகவே வள்ளுவர் இரு வித உலகங்களைத் தெளிவாக விளக்குகிறார்.

1. இருள் சேர்ந்த இன்னா உலகம்.

2. இருள் நீங்கி இன்பம் பயக்கும் உலகம்.

இவ்விரண்டு உலகங்களையும் சமய இலக்கியங் கள் இன்புலகம், துன்புலகம் எனக் குறிப்பிடுகின் றன. 'இருள்' என்பது நரகத்தின் மறுபெயராகக் குறிக்கப்படுகிறதெனலாம். இருள் என்பதும் நரகம் என்பதும் கடவுளை ஏற்றுக்கொள்ளா, கடவுளின் அருளற்ற, ஒளியற்ற நிலையே.

கடவுள் அண்டம் முழுமைக்கும் அதிபதியானால், அவன் இல்லாத நிலையும் உண்டா? என்ற வினா எழலாம். அவன் இல்லாத நிலை எங்கும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அவனை ஏற்றுக் கொள்ளா நிலை உண்டு. பகலவன் நன்கு தன் கதிர்களை வீசும் நண்பகலிலும் இருளுள்ள இடம் உண்டா? உண்டு. எங்கே? பகலவனின் கதிர்கள் வரமுடியாதபடி தடை செய்யப்பட்ட இடத்தில், நன்கு கதிர் வீசும் வெட்ட வெளியில், ஒரு பாத்திரத்தை நன்கு மூடி வெயிலில் வைத்தோமானால், பாத்திரம் வெளிச்சத்தில் இருந்த போதிலும், பாத்திரத்தின் உள்ளே இருள் இருப்பதைப்போன்று, இறைவனுக்கு முன் இருந்தும், இறைவனை தன் உள்ளே வரமுடியாதபடி தடுத்து, இருளுக்கு மட்டுமே இடம் கொடுக்கும் உள்ளங்களும் உண்டு. அவ்வுள்ளத்தில் தங்கி இருப்பது இருள். அங்கே ஒளி தன் செயலைச் செய்யமுடிவதில்லை. இருள் ஆட்சி புரிகிறது. இருளின் பயன் துன்பம். இவ்வாறு இருளையுடைய உள்ளங்கள் யாவும் தாமாகவே ஒன்று சேரும் இடமே இருள்சேர்ந்த இன்னா உலகம்.

இருள் பொதுவாக இருவகையாகப் பிரிக்கப் கப்படுகிறது.

1. புற இருள்.
2. அக இருள்.

புற இருள் புறக் கருவியாகிய விளக்கு, சூரியன் போன்றவைகளால் நீக்கப்படுகிறது. அதையும் வள்ளுவர் கூறுகிறார்.

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு 1186

அகத்தை ஆளும் ஆண்டவனின் அருளே அக இருளைப் போக்கக் கூடியது.

விளக்கின் வெளிச்சத்தில் வெளிஇருள் நீங்கு கிறது. ஆண்டவனின் அருளால் அகஇருள் நீங்கு கிறது.

ஆண்டவனின் அருளாகிய ஒளியைப் பெற்ற இன்புலகையும், ஆண்டவனின் அருளைப் பெருது இருள்சேர்ந்த இன்ஞ உலகாகிய துன்புலகையும் வள்ளுவர் தம் நூல் முழுவதிலும் தெளிவாகக் கூறு கிருர்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் 121

அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை இருள்சேர்ந்த
இன்ஞ உலகம் புகல் 243

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சியவர்க்கு 351

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு 4

"புண்ணியப் பயனை நுகர்பவன் மறுமையில் சொர்க்க பதவியைப் பெறுவான் என்றும், பாவப் பயனை நுகர்பவன் நரகபதவியைப் பெறுவான் என்றும் நூல்கள் கூறும். சொர்க்கம் என்பது தேவர்கள் உறையும் விண்ணுலகம். அது நிரம்பிய இன்ப வாழ்வையுடையது. அமரருள், ஆண்டு, புத்தேள் உலகம், புத்தேள் நாடு, புத்தேளிர் வாழும் உலகு, மேல் உலகம், வான், வானகம், விசும்பு என்ற அதன் பெயர்கள் திருக்குறளில் வருகின் றன."

"தேவலோக வாழ்வையும், அதன் சிறப் பையும், புண்ணியம் செய்தாருக்கு அவ்வாழ்வு கிடைப்பதையும், அங்குள்ளார் நுகரும் அமிழ்

தத்தையும் சொல்லும் வள்ளுவர், சொர்க்கத்துக்கு மறுதலையாகிய நரகத்தைப் பற்றியும் கூறுகிறார்.''

—ஆராய்ச்சி உரை-திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு
—பக்கம், 49-50

மேலே கூறப்படும் இரு உலகைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுக்கத் தொடங்கினால், அது ஒரு தனி நூலாக மாறிவிடும். இறப்பிற்குப் பின்னர் இருப்பதாகக் கடவுள் கொள்கையினரால் கூறப்படும், பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு முரண்பட்ட மோட்ச நரக; அதாவது இன்புலகம், துன்புலகம் ஆகிய இரு உலகக் கோட்பாடு வள்ளுவர்க்கு உடன்பாடு என்பதில் எவர்க்கும் ஐயம் இல்லாக் காரணத்தால் நாம் மேலே செல்லலாம்.

பிறவிச் சுழற்சிக் கொள்கையினரால், தங்களதே என எண்ணப்படும் 'ஊழ்' என்னும் அதிகாரத்தை நோக்குவோம். 'ஊழ்' என்பதுபற்றித் தனி நூலே வெளிவர இருப்பதால், அதன் மையக் கருத்தை மட்டும் இப்போது காணும் பொருட்டு, அவ்வதிகாரத்திலுள்ள ஓரே ஒரு குறட்பாவை மட்டும் விளக்கி, அது பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு எவ்வாறு முரண்பட்டது என்பதைக் காண்போம்.

7. வகுத்தான்

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

இங்கு கூறப்பட்டுள்ள 'வகுத்தான்' இறைவனையே குறிப்பதென திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஆராய்ச்சி உரையில் திரு. கி. வா. சகந்நாதன் அவர்கள் கூறுகிருர்கள். (பக்கம் 4)

இக்குறளுக்கு உரை கொடுக்குங்கால் பரிமேலழகரும் இச்சொல்லுக்கு 'தெய்வம்' என்றே பொருள் கொள்ளுகின்றார்.

நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை அவர்கள் தம்முடைய விருத்தியுரையில்,

> "தெய்வம் அவரவர் செய்கவினை அவரவர்க்கே என வகுத்து வைத்தலின் தெய்வத்தை வகுத்தான் என்றார்"

எனக் கூறுகின்றார்.

பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள்,

"வகுத்தான் = இன்னார்க்கு இன்னபடி என வகுக்கும் தெய்வம்" எனக் கூறுகின்றார்.

பழைய உரை:—'தெய்வம் வகுத்த வகை' எனக் கூறுகிறது.

ஆனால் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது 'குறட் செல்வம்' என்னும் நூலில் (பக். 89) இக் கருத்தை மறுத்துரைக்கிறார்.

"தெய்வம் என்ற சொல்லை கடவுள் என்ற வழக்கில் பொதுமக்கள் நம்புவதால், கடவுள் வழி என்று கருதுகின்றார்கள். ஊழிற்கும் கடவுளுக்கும் உறவில்லை. ஊழிற்கு மனித ஆற்றலினும் மிகுந்த பேராற்றலும் இல்லை 'வகுத்தான்' என்ற சொல் மனிதனையே குறிக்கும் மனிதன் தன் உள் உணர்வுகளால் என்ன நினைத்தானோ, அச் செயல்களின் விளைவையே அவன் அனுபவிக்க வேண்டும்..."

மேலே காணுகிறபடி 'வகுத்தான்' தெய்வத்தைக் குறிப்பதன்று; மனிதனையே குறிப்பது என்பது அடிகளாரின் கருத்தாக நாம் அறிகிறோம்.

ஆகவே 'ஊழ்' என்ற அதிகாரத்தின் கீழுள்ள 'வகுத்தான்' இறைவனா? மனிதனா? என்ற கேள்வி எழுகின்றது. இக் கேள்விக்கு விடை காணுமுன் இங்கு குறிக்கப்படும் 'ஊழ்' என்பதன் பொருள் என்ன? என நோக்க வேண்டுவது முக்கியமாகும்.

பொதுவாக இத் தலைப்பிற்கு, பிறவிச் சுழற்சி வழிப் பொருள் காண்போரே பலராவர் ஆனால் இவ்வதிகாரம் முழுவதையும் ஆழ்ந்து நோக்குவோர் அக் கருத்தை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள வழியில்லை.

முந்தையப் பிறவியில் செய்த நல்வினை தீவினை ஆகிய இரண்டும் இப் பிறவியை நடத்தும் ஊழ் எனக் கருதப்படுமானால், வள்ளுவர் அதைத் தெளிவாக விளக்கியிருக்க வேண்டும். அதை அவர் விளக்காததுடன், எழுமை, எழுபிறப்பு, பிறப்பறுக்கல் போன்ற ஐயத்திற்கேதுவான தொடர்களைக்

கூட இவ்வதிகாரத்தில் வள்ளுவர் பயன்படுத்த வில்லை. அதற்கு மாருக, எச்சொல்லேயும் தன் கருத்திற்கேற்ப வளைத்துத் திறமையாகப் பொருள் கூறும் பரிமேலழகர் போன்ருேருங்கூட மயக்கமடை யும் நிலையில், தன் கொள்கைக்கு மாருகக் கூறும் வகையில், 'வகுத்தான்' என்ற சொல்லேயும் இவ்வதி காரத்தில் பயன்படுத்தியுள்ளார். அடிகளார் கொடுக்கும் விடை இங்கு ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. ஊழிற்கும் கடவுளுக்கும் உறவேது? உறவில்லே. ஆம், பிறவிச் சுழற்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஊழில், அதற்கு நேர் எதிர்மாருன, நாம் கூறும் தலேமுறைக் கொள்கை யின் அடிப்படையாய் விளங்கும் கடவுளுக்கு இட மேது? இடமில்லே. சிறிதும் இல்லே.

அப்படியாளுல் 'வகுத்தான்' மனிதனு? இதற்கு விடை காணுமுன் இன்ஞெரு கேள்வியைக் கேட் பது பயன் தரும்.

வள்ளுவர்க்குக் கடவுள் கொள்கை உடன் பாடா? அதாவது வள்ளுவர் கடவுள் கொள்கை யுடையவரா?

ஆம் என்றே எல்லோரும் விடை கொடுத்தாக வேண்டும். ஏனெனில் அதில் எள்ளளவும் ஐயம் இல்லே.

அப்படியாளுல் கடவுளுக்கு உறவில்லாத ஊழைப்பற்றி வள்ளுவர் கூறுவாரா? கூறியுள்ளாரா?

சிந்திக்க வேண்டிய கேள்வி. நிச்சயம் கடவு ளுக்குத் தொடர்பில்லாத ஊழைப்பற்றி வள்ளுவர் கூறியிருக்க முடியாது. கூறிஞர் என்பதும் பொருந் தாது. இதையறிந்தே பரிமேலழகர் 'வகுத்தான்' என்பதற்குக் கடவுள் எனக் கூருது தெய்வம் என

மயக்கம் தரும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளாரே யன்றி மனிதன் என்று பொருள் கூறவில்லை. கூறினால் அது பொருந்தா உரையாகும்.

ஏன் ?

வகுத்தான், தொகுத்தார், என இக்குறட்பா குறிப்பிடும் இரண்டு உயர்திணைச்சொற்களுள் ஒன்று ஒருமை; அடுத்தது பன்மையாகும். தொகுத்தார் என்னும் உயர்திணைப் பன்மைச் சொல், மனிதர்களைக் குறிப்பிடுகிறது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் 'வகுத்தான்' என்னும் உயர்திணை ஒருமைச் சொல் குறிப்பிடுவது இறைவனையா ? மனிதனையா ? என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. மனிதனைக் குறிப் பிடுவதாகக் கொண்டால்:—

1. வகுத்தான் என்பதற்கேற்ப ஒருமை முடிவுடன்,

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தானுக்கும் துய்த்தல் அரிது

என ஒருமை முடிவே வந்திருத்தல்வேண்டும். அல்லது தொகுத்தார் என்பதற்கேற்ப வகுத்தார் எனக் குறிப்பிட்டிருக்கவேண்டும். அவ்வாறு குறிக்கப்படாமல், ஒருமை விகுதி, பன்மை விகுதி குறிக்கப்பட்டுள்ளமையால் ஒருமையால் சுட்டப் படும் வகுத்தான் மனிதன் அல்லன்.

2. இங்கு சுட்டப்படும் 'வகுத்தான்' இறைவனை எனக்கொள்ளுவதில் அதிகாரத்தலைப்பாகிய ஊழுடன் முரண்பாடு தோன்றுவதாகக் காணப் படினும், ஆழ்ந்து நோக்குமிடத்து அத்தகைய முரண்பாடு எதுவும் இல்லை.

எவ்வாறு ?

வள்ளுவர்க்குக் கடவுள் கொள்கை உடன்பாடு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. கடவுளுடன் முரண்பட்ட பிறவிச் சுழற்சிக் கொள்கையுடைய ஊழிற்கும் வள்ளுவர் இங்கு கூறுகின்ற ஊழிற்கும் வேற்றுமையுண்டா? என்பதே கேள்வி.

'ஊழ்' என்னும் சொல்லுக்கு, பழவினை மட்டும் பொருள் அன்று.

உலக முடிவு, குணம், பூர்வ கன்மம், நியமம். பகை, முடிவு, முறை, விதி, வெயில் என்னும் பொருட்களும் அதற்குண்டு. இவற்றுள் 'முறை' என்னும் பொருள் இங்கு மிகவும் பொருந்துவதாகத் தெரிகிறது. கடவுள் இவ்வண்டம் முழுவதையும் ஒரு முறையில் இயக்கிக்கொண்டிருக்கிறார். நம் அறிவுக்கு, உலகம் குறிப்பிட்ட ஒரு முறைப்படி இயங்கிக் கொண்டிருப்பது தோன்றுகிறது. அதை ஒரு குறிப்பிட்ட முறைப்படி இயக்குபவன் இறைவன். இறைவன் உலகை இவ்வாறு இயக்கும் நிலையை இறைக் கொள்கையுடையோர் இயற்கைத் திட்டம் அல்லது இயற்கை விதி (Law of Nature) என அழைப்பர்.

கடவுள் கொள்கையில் கூறப்படும் இயற்கை விதியாகிய ஊழுக்கும், பிறவிச் சுழற்சிக் கொள்கையில் கூறப்படும் பழவினைக் கொள்கையாகிய ஊழுக்கும் சில அடிப்படை வேற்றுமையுண்டு. பழவினைக் கொள்கையில் உயிரற்ற பொருட்களின் மாற்றத்திற்குத் தனிக் காரணம் கூற இயலாது. நாம் வாழும் இவ்வுலகச் சுழற்சிக்கும், அதன் சீரான திட்டமிட்ட இயக்கத்திற்கும் இவ்வுலகுடன் தொடர்புடைய மற்றக் கிரகங்களின் இயக்கம், இப்பேரண்டத்தின் இயக்கம், இவற்றிற்கும் தெளிவான காரணம் கூற முடியாது. உயிரினங்களின் மாற்றத்திற்கு மட்டுமே,

பழவினைக் கொள்கையில் விளக்கம் கொடுக்கப்படு கிறது. ஆனால் கடவுள் கொள்கையிலோ ஒவ்வொரு அணுத் துகளின் இயக்கத்திற்கும் காரணம் கூறப் படுகிறது.

'அவனின்றி ஓர் அணுவும் அசைவதில்லை' அசைவது மட்டுமென்ன ? அவை தோன்றுவதற் கும் 'அவனே' காரணம். 'அவன்' விதித்த வழியே எல்லாம் செயல்படுகின்றன. அவன் அத்தனைக்கும் விதித்திருக்கும் அவ்விதியே, முறை, ஊழ் ஆகும். கடவுளால் இத்திட்டமிட்ட மிகப்பெரிய விதி யாகிய முறையைக் குறிப்பதே 'ஊழ்' ஆகும்.

ஊழ் என்னும் சொல், 'முறைமை' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதை இலக்கியமும் நமக்குக் காட்டுகிறது.

1. கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.

—தொல்காப்பியம்-பொருள் 258

ஊழணி = முறையாக அணிந்த அணி

2. செறிவுடைத் திண்காப்பேறி வாள்கழித்து
உருகெழு தாயம் ஊழின் எய்தி
பெற்றவை மகிழ்தல் செய்யான்.

—பட்டினப்பாலை, 226-228

ஊழின் எய்தி = முறையாக அடைந்து.

3. சுழித்தெம் பந்தமாக் கரை பொருதலைத் திடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய......

—திருவாசகம்-திருவண்டப்பகுதி, 83

கா. சு. பிள்ளை : எமது பாடக் கட்டாகிய கரைகளை மோதி அசைத்து உடைத்து, வரிசை வரிசையாக மேன்மேலும் வளர்ந்து சென்ற......

கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்ப திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே.......

—புறம். 192

இறைவனின் திட்டத்திற்கிசைய அவன் நடத்தும் முறையை எதிர்க்க வல்லார் யார்? ஆகவே யாவும் அவன் இயக்கும் முறை வழியே நடக்கும். அவன் வகுத்த வகையேயன்றி யார்க்கும் துய்த்தல் அரிது.

இறைவன் விதித்துள்ள இம் முறையாகிய ஊழை எதிர்க்க முடியுமா? எதிர்த்து வெல்ல முடியுமா? முடியும் என்கிறார் வள்ளுவர். முடியுமா! அப்படியானால் கடவுளின் திட்டத்தையும் உடைக்க முடியுமானால் உடைக்கும் அவ்வாற்றல், கடவுள் ஆற்றலினும் சிறந்ததல்லவா? கடவுள் ஆற்றலினும் சிறந்த ஓர் ஆற்றல் எவ்வாறு இருக்க முடியும்? கடவுள் கொள்கைப்படி கடவுள் ஆற்றலினும் சிறந்த ஓர் ஆற்றல் இருக்க முடியாது.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

என வள்ளுவரே தெளிவாக ஊழின் வலிமையை அடைமொழியும் இட்டு 'பெருவலி' எனக் கூறுவதுடன், இதனினும் சிறந்தது வேறு ஒன்றும் இல்லை என, அதையும் தெளிவுபடுத்தும் முகத்தான் 'யாவுள?' என, வினாவும் எழுப்பிவிடுகிறார்.

ஆகவே வள்ளுவர் உள்ளத்தில் 'கடவுள் வலியினும் வேறு வலி உண்டோ' என்ற ஐயம் இல்லை. அப்படியானால் இந்த ஊழையும் வெல்ல முடியும் என்ற கருத்தில் தெளிவாகவே,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். —20

என ஆள்வினையுடைமை அதிகாரத்தில் வள்ளுவர் கூறக் காரணம் என்ன? இவை ஒன்றுக்கொன்று முரண் அல்லவா? ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கேள்வி.

மிகப்பெரு வலிமை வாய்ந்த பேரரசன் ஒருவன் ஒரு பெருநாட்டை ஆளுகிறான். எல்லாம் அவன் விருப்பப்படி அவனுடைய திட்டப்படியே முறையாக நடைபெற்று வருகின்றன. ஒரு சிறியவன் அரசனுடைய அம் முறையை மாற்ற நினைக்கிறான். முடியுமா? நன்கு சிந்தித்து விடை கூறுங்கள்... அரசனுடைய ஆற்றலையும், இவனுடைய ஆற்றலையும் ஒப்பிடுங்கால் இவன் எம்மாத்திரம்?

ஆகவே அச் சிறியவனால் அரசனுடைய முறையை, திட்டத்தை, விதியை, ஊழை மாற்ற முடியாது என நினைக்கலாம். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால், அது அச் சிறியவனுக்கு முடியக்கூடிய செயலே என்பது தெரியும்.

எவ்வாறு?

அரண்மனைத் தோட்டத்தில் யாரும் மலர் பறிக்கக் கூடாது என அரசன் விதி வகுத்துள்ளான், அது செயல்படுத்தப்படுகிறது என வைத்துக் கொள்ளுவோம். சிறியவன் அரண்மனைத் தோட்டத்திலுள்ள மலரை விரும்புகிறான். இவனுக்கு மலர் கிடைக்குமா? அரண்மனைத் தோட்ட மலரை

மற்றவர் அடைய முடியாதென்பது விதியல்லவா? அவ்விதியை மாற்ற முடியுமா? அரசனை எதிர்த்து விதியை மாற்ற முடியாது. முயன்றால் காவலர் கொண்டு சென்றுவிடுவர். அரசு 'விதியினும் பெரியது உண்டோ?'

'ஊழிற் பெருவலி யாவுள'

அரசனை எதிர்த்து அம் முறையை மாற்ற முடியாது. ஆனால் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பதற்கேற்ப, மாற்ற விரும்பும் சிறுவன், அரசனுடைய அருள் பெற்றவனாக, ஆதரவு பெற்றவனாக, அன்பு பெற்றவனாக இருப்பானானால் அரசனுடைய அனுமதிபெற்று மாற்ற முடியு மல்லவா?

ஆகவே அரசனின் விதியை சிறியவன் மாற்ற முடிகிறது.

'ஊழையும் உப்பக்கம் காண்பர்'

இம் மாற்றம் அரசனை எதிர்த்து நடைபெறுவதன்று. அரசனுடைய ஆதரவுடனேயே மாற்றப் படுவது.

அவ்வாறே கடவுளின் அடியவர், கடவுளின் அருளால் இயற்கை விதிகளையும் மாற்றும் ஆற்றல் பெறுகின்றனர். அவர்கள் கல்லை உணவாக்கலாம், நீரைத் தேனாக்கலாம், இறந்தோரை உயிர்பெற வைக்கலாம். இவை இயற்கை விதிக்கு முரண் பட்டவையாய்த் தோன்றினும் அவர்களால் முடியும்.

'ஊழையும் உப்பக்கம் காண்பர்.'

ஆனால் கடவுள் கொள்கையற்ற பிறவிச் சுழற்சிக் கொள்கையிலோ, பழவினையாகிய ஊழை யாராலும் மாற்றவே முடியாது. ஊழ்வினை தன் பயனைத் தந்தே தீரும்,

'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்'

இடைக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட கலப்புக் கொள்கையின் காரணமாக, கடவுள் கொள்கைக்கும் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கும் இடையேயுள்ள வேற்றுமை நன்கு தெளிவுபடுத்தப் படவில்லை. இன்றும் மக்கள் இக்கலப்புக் கொள்கையிலேயே இருக்கும் காரணத்தால், தெளிவு பெறவில்லை என்றே துணிந்து கூறலாம். கடவுள் கொள்கைக்கு முரண்பட்ட, பிறவிச் சுழற்சிக் கொள்கையில் கூறப்படும் தலைவிதியிலும் நம்பிக்கை கொண்டு, அதே நேரத்தில் கோவிலுக்குச் சென்று கடவுளையும் வணங்கும் மக்களே இன்று அதிகம்.

ஆகவே வள்ளுவர் காட்டும் ஊழ், இறைவன் உலகை இயக்கும் முறையைத் தெரிவிப்பதேயன்றி, பழவினையை அடிப்படையாகக் கொண்ட பிறவிச் சுழற்சிக் கொள்கையையுடையது அன்று. இங்கு கூறப்படும் வகுத்தானும் பிறவிச் சுழற்சிக் கொள்கைக்குப் பொருந்தாத, கடவுள் கொள்கைக்கு மட்டுமே பொருந்தும் இறைவனே ஆகும்.

ஆகவே வள்ளுவர் பிறவிச் சுழற்சிக் கொள்கையையும், கடவுள் கொள்கையையும் கலந்து கலப்படக் கொள்கையாகக் கூறவில்லை. அக் கலப்பு யாவும் இடைக்காலத்தில் திருக்குறளுக்கு உரை கண்ட உரையாசிரியர்களின் உள்ளத்திலிருந்து தோன்றியவையேயாகும். திருவள்ளுவரின் கடவுளைப் பற்றிச் ஜைன சமயத்தைச் சார்ந்த பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினாரின் கருத்தை நோக்குவோம் :—

"இறுதியாக ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதுதான் திருவள்ளுவரின் கடவுள்

யார்? என்பது. திருவள்ளுவரின் கடவுள் அருளறம் (Universal Benevolence) என்பது தவிர வேறில்லை. இந்த அருளறக் கடவுள் உருத்திரன் அல்லது இந்திரன்போல் சினங்கக்கும் வடிவமுடையது அல்ல. இக் கடவுள் தனக்கு வேண்டாதவர்களைத் தீயும் கந்தகக் கல்லும் சொரிந்து கொல்லாது; கண்ணினின்று கனலைக் கொழித்து மக்களை அழிப்பதும் இதன் தன்மையன்று. இதன் கைகளில் கொலைக் கருவிகள் எவற்றையும் நாம் காண முடியாது. அருளறக் கடவுளின் இயற்கை அனைத்துயிர்க் காதல் (Universal Love) ஒன்றே தவிர மற்றில்லை. இக்கடவுளுக்கு நண்பர்களும் கிடையா; பகைவர்களும் கிடையா. வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் இதற்கு ஒன்றுதான். இதனிடத்தில் உள்ள ஓரே ஆயுதம் அன்பாகும். அன்புக்கு முன்னே கொடிய புலியும் பொறுமையான ஆட்டுக்குட்டியாக மாறிவிடும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா?"

—திருக்குறள் வழங்கும் செய்தி, பக். 117

கடவுள் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத சமண சமயத்தைச் சார்ந்த இவ்வறிஞர் நடுநின்று கூறும், அன்பு ஒன்றையே ஆயுதமாகக் கொண்ட 'வகுத்தானாகிய' இக் கடவுள் யார்? விடையை நீங்களே கூறுங்கள்.

8. பிறப்பு

வள்ளுவர் காட்டும், அன்பு ஒன்றையே ஆயுதமாகக் கொண்ட கடவுள், மனிதர் உள்ளங்களில் அன்பையே வேரோடு அழிக்கக்கூடிய கொடுமை நிறைந்த சாதி வேற்றுமையை அனுமதிப்பாரா? திருவள்ளுவர் காட்டும் கடவுள் கொள்கையில் உறுதியாக அதற்கு இடமில்லை.

ஆனால் இடைக்கால உரையாசிரியர்கள் சாதி முறையைக் கலந்து உரை கூறினர். அவர்கள் அவ்வாறு கலப்பதற்கு, அவர்கள் பயன்படுத்திய சொல்லே 'பிறப்பு.' இச் சொல்லுக்குப் பரிமேலழகர் போன்ருேர், தாங்கள் விரும்பியவாறெல்லாம் உரை கூறி தங்களிடமுள்ள சாதிக் கொள்கையைத் திருக்குறளில் திறமையாகப் புகுத்தினர். அதைச் சிறிது நோக்குவோம்.

திருவள்ளுவர் திருக்குறளை எழுதக் காரணம் என்ன? பதில் அவரே கொடுக்கிருர். மனிதர் நீடுவாழ்வடைய வேண்டுமென வள்ளுவர் விரும்பினுராம். அதற்கு ஒரு நெறி இருக்கிறதாம். அது பொய்தீர் ஒழுக்க நெறியாம். அதைக் காட்டியவர் ஐந்தவித்தாஞகிய கடவுளாம்.

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்ருர் நீடுவாழ் வார்.

ஐந்தவித்தான் காட்டிய அப்பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்க வானின் துணை வேண்டுமாம்.

> நீரின்றமையா துலகெனின் யார் யார்க்கும்
> வானின் றமையா தொழுக்கு.

அவ்வொழுக்கத்தைப் பூமியில் நிலைநிறுத்தும் படியாக அதன் பொருட்டே, அருவமான இறைவன் அருவத்தை நீத்து ஐம்புலனுடைய மனிதனுக இப் பூமிக்கு வந்தானும். அதைக் கூறுவதே பனுவல் துணிவாம்.

> ஒழுகத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவல் துணிவு.

ஆகவே அவர் காட்டிய ஒழுக்கமே உயிரைக் காட்டிலும் சிறந்தது. ஏனெனில் அவ்வொழுக்கம் உயர்வைத் தரக்கூடியது.

> ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப் படும்.

அவ்வொழுக்கத்தில் யார் நிலைநிற்கிறர்களோ அவர்களே சிறந்தவர்கள். மற்றவர்கள் இழிந்த வர்களே.

> ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும். —133

இங்கு உயர்வு தாழ்விற்குக் காரணம் ஒழுக்கத்தைக் கைக்கொள்ளுவதும், அதை விட்டுவிடுவதுமே யல்லாது வேறு சாதி முறையன்று. ஒரே தந்தைக்குப் பிறந்த இருவரில், அண்ணன் ஒழுக்க முடையவனுனல், உயர்ந்தவனெனக் கருதப்படுவான். தம்பி ஒழுக்கமற்றவனுனல் இழிந்தவனெனக் கருதப்படுவான். இந்த அண்ணன் தம்பிகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் தந்தையரைப்

போன்றே இருக்கலாம். இருந்தால் தந்தையர்க்கு ஏற்பட்ட உயர்வு தாழ்வே இவர்களுக்கும் ஏற்படும்.

இவ்வாறு மேலாகக் கருதப்பட்ட அண்ணனுக்குப் பிறந்த பிள்ளை கல்லாதவனுயிருந்து, கீழானவனுகக் கருதப்பட்ட தம்பிக்குப் பிறந்த பிள்ளை கற்றவனுய் இருப்பின் அங்கே மாற்றம் ஏற்பட்டுவிடும்.

மேற்பிறந் தாராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ருர் அனைத்திலர் பாடு. —409

ஆகவே பிறந்த ஒவ்வொரு மனிதனின் கடமை என்ன? தான் பிறந்துள்ள குடியைத் தனது ஒழுக்கத்தாலும், பிள்ளைகளை நல்ல ஒழுக்கத்தில் வளர்ப்பதாலும் சிறந்ததாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதுவே நல்ல ஆண்மை ஆகும்,

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல் —1026

எவ்வளவு சிறந்தவனுயினும், நிறைமொழி மாந்தராகிய ஐந்தவித்தான் அருளிய, மறைமொழியாகிய அந்தணர் நூலை ஆராய்ந்து பார்ப்பானுகிய மேலானவனுயினும், அவனுக்கும், ஒழுக்கம் குன்றுமாயின் அவனுடைய நல்ல குடியில் வந்த பிறப்பு கெட்டுவிடும்.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். —134

வள்ளுவர் கூறும் ஆராய்ந்து பார்ப்பானும், ஆரியப் பார்ப்பனரும் வேருனவர் என்பது நோக்கத் தக்கது. அந்தணர், பார்ப்பனர் என்று வள்ளுவர் பயன்படுத்தும் சொற்கள் ஆரியர்களைக் குறிப்பன அல்ல. ‘அந்தணர்’ விளக்கம் ‘சான்ருேர் யார்?’ காண்க.

ஒழுக்கத்தால் வரும் உயர்வு இழிவு பற்றிக் கூறுபவர் வள்ளுவரேயன்றிப், பிறப்பினால் வரும் உயர்வு தாழ்வை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமன்றி வன்மையாகக் கண்டிப்பவருமாவர்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான.

எனக் கூறும் வள்ளுவரிடம் பிறப்பினால் வரும் ஏற்றத்தாழ்வுக் கொள்கை, எவ்வாறு இடம்பெற முடியும்? மேலும் முந்திய குறட்பாவில் கூறப்படும் பார்ப்பான் 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்தின் கீழ்க் கூறப்படுபவன் என்பது உள்ளத்தில் கொள்ளத் தக்கது.

மேலும் வள்ளுவர் சாதிப் பகுப்பை ஏற்றுக் கொள்ளாது, நற்குடியின் உயர்வைச் சிறப்பித்துக் கூறுகிறார். இந்நற்குடி, ஒழுக்கத்தால் சிறந்தவர்களைக் குறிப்பதேயன்றி, பிறப்பால் அன்று.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல். —959

தலைமுறைக் கொள்கையில் கூறப்படும் நற்குடியைச் சிறப்பித்துப் பல குறட்பாக்கள் கூறுகின்றன.

ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். —952

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு. —794

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. —502

அடுக்கிய கோடிபெறினுங் குடிப் பிறந்தார்
குன்றுதல் செய்த லிலர். —954

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 681

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. —992

குடிப்பிறந்தார்கண் விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. —957

ஆகவே நற்குடியைச் சிறப்பிக்கும் பெருமை பிள்ளைகளையே சாருகிறது. பழிபிறங்காப் பண்புடை மக்களைப் பெறுவதைவிடச் சிறந்த பேறு ஒருவனுக்கு வேறெதுவுமே கிடையாது.

பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

ஆனால் பெரும் பேருகிய இந்த மக்கட் பேறையே வேண்டாம் என் ஒருவன் ஒதுக்கிவிட்டு, இல்லறத்தை நீக்கித் துறவறத்தை ஏற்றால், அவனுக்கு அவன் உடம்பும் மிகையான தொன்றே.

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை. — 345

ஆகவே உலகில் பற்று விட்டு, இல்லறத்தை ஏற்காது துறவறத்தை ஏற்ற உடனேயே, அவனுடைய பரம்பரை அற்று விடுகிறது. மகன், பேரன் என்ற வரிசை முறையில் அவன் குடியில் வரும் பிறப்பு அற்று விடுகிறது. அப்போது தான் அவன் சரியானபடி நிலையாமையை உள்ளவாறே உணர்ந்து கொள்ளுகிறான்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்.

துறவிக்கு எல்லாப் பற்றும் நீங்க வேண்டும். அவ்வாறு பற்று நீங்கவில்லையானால், அவா வளர்ந்து, அவன் விட்டவை மீண்டும் அவனைப்

பற்றிக்கொள்ளும். பெண்பற்று மீண்டும் தோன்றி, அதன் பயனுகத் துறவறம் நீங்கி, இல்லறம் வந்து மகன், பேரன் என்ற பிறவித் தொடர்பும் ஏற்பட்டு விடும். இந்த அவா இயல்பானது. எல்லா உயிர்களுக்கும் உரியது.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

ஆகவே துறவறத்தை மேற்கொண்டவர்கள் எல்லாப் பற்றுக்களையும் அறுத்து விட வேண்டும். பற்று நீக்கத்தில் உயர்ந்ததே அவா அறுத்தல். எல்லா அவாவினும் பெரியதே, இயல்பான பால் உணர்ச்சி. இந்த இயல்பான ஒன்றையே துறப்பதுதான் துறவு. ஆகவே அவா என்ற வரிசையில் எண்ணப்படுவதில் முதலிடம் வகிப்பதுவே, இந்த இயல்பான, பிறவிக்குக்காரணமான பால் உணர்ச்சியாகிய பிறப்பு அவா ஆகும்.

ஆகவே துறவி ஒருவனுக்கு முதன்மையாக வேண்டுவது இப்பிறவி அவா தோன்ருமல் இருக்க வேண்டுவதேயாகும். இது எப்போது வரும்? துறவாகிய வேண்டாமையை விரும்பலே இப்பிறவி அவா தோன்ருமையாகிய பிறவாமை தோன்ற வழியாகும்.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். — 362

இப்பிறவி அவாவை வள்ளுவர் இவ்வளவு வற்புறுத்திக் கூறக்காரணம், துறவி ஒருவனுக்கு மிகுந்த போராட்டத்தைக் கொடுப்பது இது ஒன்றேயாகும். ஒருவன் மற்ற யாவற்றையும் வெற்றிகொள்வது எளிது. ஆனல் இயற்கையாகவுள்ள பிறப்பிற்குக் காரணமான பால் உணர்ச்சியாகிய அவாவை நீப்பதே மிகமிகக் கடினம். அக்கடினமான நிலையே துற

வற நிலை. ஆகவே அத்துறவற நிலையில் அவாவை நீக்க வேண்டும். அதுவும் இயற்கையான அவாவை செயற்கையாகிய மிகுந்த முயற்சியால் நீக்க வேண்டும். அது சாதாரண இயற்கை அவா மட்டுமன்று. ஆரா இயற்கை அவா வாகும்.

ஆரா இயற்கையவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். — *370*

ஆகவே மேலே நாம் காணும் குறட்பாக்கள் எந்த விதத்திலும், பிறவிச் சுழற்சிக்கொள்கைக்கோ அல்லது சாதிப் பகுப்புக் கொள்கைக்கோ ஏற்றவை அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். ஆனால் இடைக்காலத்தில், கடவுள் கொள்கை பிறவிச் சுழற்சிக்கொள்கை இவை ஒன்றாகக் கலந்த கலப்புக் கொள்கையிலும், சாதிப்பகுப்பு ஏற்படுத்தப்பட்ட கொடிய தீமை கலந்த சாதிக்கொள்கையிலும் ஊறித்திளைத்த உரையாசிரியர்கள், தங்களுடைய உள்ளக்கிடக்கையை வள்ளுவர்குறள் மீது ஏற்றி உரை வரைந்தனர். இல்லறத்தானைப்பற்றிக் கூறப்படும் குடியையும், பிறப்பையும் சாதியாக்கினர். துறவறத்தானைப் பற்றிக் கூறப்படும், பரம்பரை துண்டித்தலாகிய பிறப்பு நீக்கத்தைப் பிறவிச் சுழற்சிக் கொள்கையாக்கினர். சாதியின் பெயரால் இடைக்காலத்தில் நடத்தப் பட்ட அநீதிகள் கணக்கிலடங்கா.

ஒரே குற்றம் செய்த இருவரில் ஒருவன் பிராமணனாகவும், மற்றவன் சூத்திரனாகவும் இருப்பின் உயர்சாதியில் பிறந்த ஒரே காரணத்திற்காக பிறப்பின் அடிப்படையில் பிராமணன் தலை மழிக்கப்படுவான்; சூத்திரன் தலை வெட்டப்படுவான்.

சாதி முறையின் கொடுமையையும், அதிலிருந்து விடுதலை கொடுத்தவர்களையும் சமண சமயப் பெரி

யாரான பேராசிரியர் சக்கரவர்த்தி நயினர் கூறுகிறார்:—

"அக்காலத்தில் குற்ற நீதி முறையும் வருண முறையை ஒட்டியே இயங்கி வந்தது. சமுதாயத்தில் பழியாளர்கள் (Accused) புரிந்த குற்றங்கள் அவர்களின் வருணத்திற்குத் தகுந்தாற்போல் தரத்தில் மாறுபடும். குற்றத்தின் இயல்பும் அளவும் வருணத்தைக் கொண்டுதான் வரையறுக்கப்படும். குற்றத்தின் இயல்பு மாறுபடும் போது, அதேபோல் தண்டனையும் வருணத்திற்கு வருணம் மாறுபடுவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இங்ஙனம் வருண ஒழுக்கம் இந்தியாவை வெள்ளைக்காரன் கைப்பற்றும் வரை ஒரு வன்மை வாய்ந்த சக்தியாக விளங்கி வந்தது. ஆனால் இந்த முறை தற்கால உலகத்திற்குப் பொருத்தமான ஒன்று என்று யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இம்முறையை அடிப்படையாகக் கொண்ட இந்து சட்டம் (Hindu Law) எண்ணிறந்த நூற்றுண்டுகள் இந்தியாவில் நிலவி வந்தது. ஆனால் வெள்ளைக்காரர்கள் இங்கு வந்ததும் ஆகூழ்வசமாக இச்சட்டத்தைச் சார்ந்த குற்ற நீதிமுறை பொருத்த மற்றது என்று நீக்கப்பட்டு விட்டது.

மனிதர்களின் பிறப்புக்கும் சட்டத்துக்கும் ஒரு விதத்தொடர்பும் இல்லை என்பதைப் பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு விளக்கியது. ஒருதலைச் சார்பும் அச்சமும் இல்லாத ஒரு நீதி முறையை இந்தியாவிற்கு வழங்கிய பெருமை பிரிட்டிஷாரையே சாரும் என்று சொன்னால் அதில் தவறு இருக்கமுடியாது.

பிரிட்டிஷாரின் போக்கு நவீன காலத்தில் நம்மால் பாராட்டப்படுவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

ஆனால் திருவள்ளுவர் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றிச் சமநீதி வடிவில் பொருட்பாலை அமைத்ததுதான் நமக்கு வியப்பைத் தருகிறது.''

(திருக்குறள் வழங்கும் செய்தி. பக். 101, 102)

பேராசிரியர் அவர்களுக்கு இது வியப்பைக் கொடுக்கலாம். ஆனால் நமக்கு அங்கு வியப்பதற்கு எதுவுமே இல்லை. காரணம் பேராசிரியர் கூறும் பிரிட்டிசாரும், இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டவர் எனச் சொல்லப்படும் திருவள்ளுவரும் ஒரே ஊற்றிலிருந்து புறப்பட்ட நன்னீரைச் சுவைத்தவர்கள். அவர்களுக்குள் அந்த உயிர் ஊற்று ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நன்னீர் ஊற்றாக விளங்குபவரே, பிரிட்டிசாரும் திருவள்ளுவரும் போற்றிப் பின்பற்றும் பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டிய ஐந்தவித்தானாகிய கடவுளாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

அவன் வழி நின்றோர்க்கு உறுதியாக உண்டு நீடுவாழ்வு.

இதை மேலும் ஆயும் உங்கள் சிந்தனைக்கு :—

1. 'எழுமை'—பொருளென்ன ?
   எழுமைக்கு ஏழு பிறப்பே பொருளென்றால் 'எழுமை எழுபிறப்பு' என வள்ளுவர் கூறியதையே மீண்டும் கூறக் காரணம் என்ன ?

2. விழுமந் துடைத்தவர் நட்பை எழுமை எழுபிறப்பும் எண்ணிப் போற்றும் யாராவது ஒருவரையாவது பிறவிச் சுழற்சிக் கொள்கையில் காட்டமுடியுமா ? வரலாறு உண்டா? இல்லாக் கருத்தை வள்ளுவர் கூறுகிறாரா ? பொருந்துமா ?

3. "பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்
எழுபிறப்பும் தீயவை தீண்டா."

—ஏழுவகையான பல்கோடி பிறவியிலும் 'தீயவை தீண்டா' என்ருல் பொருள் என்ன ?

'தீயவை தீண்டாப் பல்கோடிப் பிறப்பு'— பொருந்துமா ? பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி மக்களின் ஆன்மாவுக்கும் தந்தையின் ஆன்மாவுக்கும் தொடர்புண்டா ? இல்லையெனில் 'பண்புடை மக்களைப்பெற்ருல் எழுபிறப்பும் தீயவை தீண்டா' எனக் கூற முடியுமா ?

அப்படியாஞல் வள்ளுவர் கூறும் 'எழு பிறப்பு' பிறவிச் சுழற்சிக் கொள்கைக்கு மாறுபட்டதா ?

4. அடக்கல், கல்வி, இரண்டும் பயன்படுவது பிறவி நீக்கத்திற்கா ? பிறவி ஆக்கத்திற்கா ? பிறவிச் சுழற்சிக் கொள்கையின்படி, ஆரும் படியில் இருக்கும் மனிதனுக்கு இவை இரண்டும் பயன்படுவது எவ்வாறு ? ஆரும் படியிலுள்ள மனிதன் முதல்படியாகிய மரம் புல் பூண்டாக மாறும்பொழுது இவை பயன் படும் என்ற கருத்துப் பொருந்துமா ?

5. பற்றற்ற உடனே பிறப்பு அறுந்துவிடுமா ? பிறவியில் இருந்துகொண்டே பிறப்பு அறுந்துவிட்டது என்பது பொருந்துமா ?

பிறப்பறுத்த பின்னர் அடையும் நிலை என்ன ?

'நிலையாமை காணப்படும்' — சரியான பொருள் என்ன ?

6. 'ஊழுக்கும் கடவுளுக்கும் உறவில்லை' என்ற தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் கருத்து சரிதானா ?

சரிதான் என்றால் ஊழ் காரணமாக இடைவிடாமல் ஏற்படுகின்ற பிறவிச் சுழற்சியிலிருந்து கடவுள் துணையின்றி விடுபட முடியாது என்னும் கருத்து எவ்வாறு பொருந்தும் ?

(இறைவனடி சேராதார் பிறவிப் பெருங் கடல் நீந்தார்.)

7. வள்ளுவர் கூறும் கடவுள் வாழ்த்திலுள்ள 'பிறவிப் பெருங்கடல்' பிறவிச் சுழற்சிக் கொள்கைப்படி பல்கோடிப் பிறவியைக் குறிக்குமானால் ஊழுக்கும் கடவுளுக்கும் உறவு உண்டு என்பதாகிறதல்லவா ? தவறு தானே ?

8. கடவுள் வாழ்த்திலுள்ள 'பிறவிப் பெருங் கடலு'க்கும் 'பிறவாழி'க்கும் உள்ள வேற்றுமை என்ன ?

'பிறவாழி' உறுதிப் பொருள் நான்கனுள், அறம் நீங்கலாக உள்ள பொருள் இன்பம் வீடு ஆகிய மூன்றையும் குறிக்குமானால், வீட்டைக் கடந்து செல்வது எங்கே? உறுதிப் பொருள் நான்கனுள் உரையாசிரியர் வீட்டை விட்டது ஏன் ?

நான்கனுள் அறம் நீங்கலாக மற்றவற்றை 'ஆழி' எனக் கூறுவதும், அதை நீந்த வேண்டும் என்பதும் பொருந்துமா ?

கடவுள் உறுதிப் பொருள் நான்கனுள் அறத்திற்கு மட்டுமே தலைவனா ? மற்ற மூன்றும் கடவுளுக்கு மறுதலையா ?

9. 'ஊழ்' அதிகாரத்தில் கூறப்படும் 'வகுத்தான்' இறைவனா? மனிதனா?

'இறைவனே' எனில் ஊழிற்கும் கடவுளுக்கும் உறவுண்டா?

மனிதனே எனில் வகுத்தான், தொகுத்தார் என ஒருமையையும் பன்மையையும் கலந்து கூறியது பொருந்துமா? வள்ளுவர்க்குக் கடவுள் கொள்கை இல்லை எனக் கூற முடியுமா?

10. வள்ளுவர் 'இருள்' என்னும் சொல்லால் சுட்டுவது பிறவிச் சுழற்சியையா? அல்லது தலைமுறைக் கொள்கையில் நரகம் எனக் கூறப்படும் துன்புலகையா?

'இருள் சேர்ந்த இன்னா உலகம்'—பிறவிச் சுழற்சியிலுள்ள பிறவியா அல்லது நரகமா? பிறவிச் சுழற்சியைக் குறிக்கவில்லை எனில் 'இருள்சேர் இருவினை' எவை?

நல்வினை இருள்சேர்ந்த இன்னா உலகில் சேர்க்குமா?

நல்வினை செய்வதா? வேண்டாமா?

நல்வினையும் இருளில் சேர்க்குமானால் 'மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று' எனக்கூறும் வள்ளுவர் கூற்று தவறானதா?

எழுபிறப்பு-?

ஆசிரியரின் வெளியீடுகள்

1.	திருவள்ளுவர் கிறித்தவரா ?	3 50
2.	ஐந்தவித்தான் யார் ?	1 00
3.	'நீத்தார்' யார் ?	1 00
4.	'வான்' எது ?	1 00
5.	சான்றோர் யார் ?	5 50
6.	எழுபிறப்பு – ?	2 50
7.	இன்பத்துப்பால் ஏன் ?	அச்சில்
8.	புலால் மறுத்தல் சைவமா ?	,,
9.	ஊழ் – ?	,,

* * *

கிடைக்குமிடங்கள் :

மெய்ப்பொருள் பதிப்பகம்,
2-A, அப்பாத்துரை நாய்க்கர் தெரு,
சென்னை–23.

பாரி நிலையம்,
பிராட்வே, சென்னை–1.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
பிராட்வே, சென்னை–1.
திருநெல்வேலி-6. மதுரை-1. கோவை-1.

நல்லாயன் பண்ணை,
அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.

கிறித்தவ இலக்கிய சங்கம்,
பார்க் டவுன், சென்னை-3

தமிழ் இலக்கியக் கழகம் [T. L. S.]
திருச்சி–1.